Registered as a News Paper in Sri Lanka

சமூக அரசியல் மாத இதழ்



# கண்ணோட்டம்

KANNODDAM

කණ්ණෝඩ්ඩම්

வெளியீடு :- 78 டிசம்பர் 2016 விலை ரூபா :- 10.00

## இழந்து விடக் கூடாத சந்தர்ப்பம்

2015 ஜனவரி 8 இல் மக்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கைகள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் இருந்து நல்லாட்சி அரசு என்று சொல்லப்படும் அரசானது பின்வாங்கி விடக்கூடாது.

பரவலான வெகுஜன அபிப்பிராயங்களுடன் முன்னெடுக்கப்பட்ட அரசியல்யாப்பு சீர்திருத்த முயற்சிகள் சிதைந்து விடக்கூடாது.

பாராளுமன்றத்தின் பிரதான எதிர்- ஆளும் கட்சிகள், அனைத்து அரசியல்- சிவில் சமூகத்தினர், தொழிற்சங்கங்கள் எல்லோருமே தமது வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

அரசியல் யாப்பு சபையாக மாற்றப்பட்ட பாராளுமன்றம் மக்களின் அபிலாசைகளினை உணர்ந்து அதன் நோக்கங்களை நிறைவு செய்ய வேண்டும்.

அரசியல் தலைவர்கள் முதிர்ச்சியை வெளிப்படுத்த வேண்டும்.

நாடு, மக்கள் -குறிப்பாக தமிழர்கள்- சிறுபான்மை சமூகங்கள் சந்தித்த பேரழிவுகளை மனதில் இருத்தி இனிமேலும் இத்தகைய நிகழ்வுகள் நிகழக் கூடாது என்ற எண்ணத்துடன், பெருந்தன்மையுடன், சமூகப் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். இந்த சந்தர்ப்பம் தவற விடப்பட்டால் வேறெதுவும் தெளிவாகத் தெரியவில்லை. நாடு அராஜகத்தை நோக்கி, நரகத்தை நோக்கி திரும்பாதிருக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்



## யுக புருசன்

அமெரிக்காவின் படலையில் சாமானியர்களின் அதிகாரத்தை நிலை நாட்டியவர்.

நீதியான உலகினைப் படைக்க முடியும் என்பதை இறுதி மூச்சுவரை நிலைநாட்ட முயன்றவர். உலகின் பல தேசங்களில் விடியல் கீதங்கள் இசைக்கப் பங்களித்தவர்.

( 3ம் பக்கம் பார்க்க )




## தோழர் றொபேட் பிறந்த நாள் நினைவு தினம்

24.12.1957





**தம்பிராசா சுபத்திரன்**

(யாழ் மாநகரசபை உறுப்பினர்)

**தேச விடுதலையை நேசித்து, மானிட தர்மத்தை மதித்து நின்றதால்**
**ஏக பிரதிநிதித்துவத்தின் எதிரியானாய் - இடர்களின் நடுவேயும்**
**தஞ்சமென மண்டியிடாது தலைநிமிர்ந்து நின்று காவியமானாய்**
**காற்றில் கலந்த போதும், சாய்ந்துவிட்ட வல்லாதிக்கம் - உன்**
**கருத்தின் வலிமையை பறைசாற்றி நிற்கின்றது.**
**இனி நிமிர்ந்தெழும் நீ உயர்த்திப் பிடித்த மானிட தர்மம்.**

## நூல் வெளியீடு

தம்பியப்பா கோபாலகிருஷ்ணன் அவர்கள் எழுதிய "தமிழர் அரசியலில் மாற்றுச் சிந்தனைகள்" நூல் வெளியீடு 20.11.2016 ஞாயிற்றுக்கிழமை மாலை மட்டக்களப்பு அரசடி தேவநாயகம் மண்டபத்தில் திரு.காசுபதி நடராசா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. முதன்மை அதிதியாக மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.பிரின்ஸ் காசிநாதர் அவர்கள் கலந்து கொண்டார். முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண கலாசார பண்பாட்டுத் திணைக்களத்தின் முன்னாள் உதவிப்பணிப்பாளர் திரு.எதிர்மன்னசிங்கம் தம்பதியினர் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம் பித்து வைத்தனர். வரவேற்புரையைப் புதுக்குடியிருப்பு 'புதுவை' தலைவர் மா.சதாசிவம் அவர்களும் நூல்பற்றிய உரையை சாமஸ்ரீ தேசமான்ய திரு.பி.டி.ஏ.

( தொடர்ச்சி 3 ஆம் பக்கம் )

## ஜெயலலிதா என்ற பெண் ஆளுமை



தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்கள் சாதாரண மக்களின் பேரபிமானம் மிக்க தலைவராக திகழ்ந்தவர். பாரதியின் கனவுப் பெண் "நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை திமிர்ந்த ஞானச்செருக்கு" கொண்டவராகப் பிரகாசித்தார்.

தமிழகத்தின் கோடிக்கணக்கான மக்கள் குறிப்பாக பெண்கள் தமது குடும்பத்தில் தாயாக மூத்த சகோதரியாக கருதினர்.


( தொடர்ச்சி 9 ம் பக்கம் )

## தனித்துவம் மிக்க ஊடகவியலாளர்

துணிச்சலும் வெளிப்படை பேச்சும் ஊடகவியலில் தனித்துவமான பாதையை வகித்துக் கொண்ட துக்ளக் சோ எம் இனிய நண்பர்.

ஈழத்தமிழர்களின் நியாயமான கோரிக்கைகள ஆதரித்த அதே நேரம் மற்றைய சில பத்திரிகைகள் போல் தமிழ் பாசிசத்தை கண்மூடித் தனமாக ஆதரித்தவர் அல்ல. தோழர் நாபாவின் நினைவு கூட்ட அரங்குகளில் தமிழகம் அறிந்த நான்கு முக்கிய பேச்சாளர்கள் இருப்பார்கள்.

( தொடர்ச்சி 6 ம் பக்கம் )





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டம்
KANNODDAM

294 A, கண்டிவீதி, புங்கன்குளம் சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2222022



# மதவாத அரசியல் முடிவுக்கு வர வேண்டும்

வெறுப்புணர்வை விதைக்கும் மதவாத அரசியல் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

இனவாத, மதவாத சக்திகள் முன்னரை விட தற்போது தீவிரமாகச் செயற்படுகின்றன.

ஒரு பல்லின சமூக அபிலாசையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசுக்கு இது எதிர்நிலையாகும்.

பொது பல சேனா போன்ற அமைப்புக்கள் இனவாத சக்திகளை உற்சாகப்படுத்துகின்றன.

குறிப்பாக முஸ்லீம், தமிழ் கிறிஸ்தவர்களுக்கெதிரான; மத, இனரீதியான தாக்குதல்களை இவ் அமைப்புக்கள் திட்டமிட்ட முறையில் மேற்கொண்டு வருகின்றன.

மட்டக்களப்பு விகாராதிபதியின் அகங்காரமான செயற்பாடுகள் முஸ்லீம்களுக்குச் சொந்தமான தொழில் துறைகள், பள்ளிவாசல்கள் மற்றும் தேவாலயங்கள் மீதான, குடியிருப்புக்கள் மீதான அங்கொன்றும்- இங்கொன்றுமான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் இலங்கையின் பல்லினப்பாங்கிற்கு பாரதூரமான அனர்த்தங்களை விளைவிப்பது மாத்திரமல்ல பொருளாதார ரீதியிலும் பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தும்.

1977, 1981, 1983 என கலவரங்கள் உருவாகுவதற்கு முன்னர் 70 களின் தொடக்கத்தில் பல இனவாத பிரசாரங்கள் அதிதீவிரவாத சக்திகளால் முன்னெடுக்கப்பட்டது. அதையொத்த நிலை ஒன்று தற்போது காணப்படுகிறது. சிலவருடங்களுக்கு முன்னர் அழுத்கம சம்பவம் தற்போது மட்டக்களப்பில் இவை தவிர முன்னும் பின்னுமாக ஏராளம் சம்பவங்கள்.

இந்த வெறுப்புணர்வு அரசியல் பற்றிய போதனைகள் சகல சமூகத்தவர் மத்தியிலும் தீவிரமாக முன்னெடுக்கப்படவேண்டிய தருணம் இது.

இளம் தலைமுறையினர் மத்தியில் இனவாதம் இல்லை. ஆனால், இளம் உள்ளங்களில் நஞ்சை வார்ப்பவர்கள் இருக்கிறார்கள்.

உலகளாவிய அளவிலும் ஆங்காங்கே வெறுப்புணர்வை ஏற்படுத்தும் அரசியல் தலையெடுத்துவருகிறது.

எம் மத்தியில் இவ்வளவு அனுபவங்கள் பட்டறிவுக்கு பின்னும் இன, மதவாத, பாசிச அரசியல் தலையெடுக்க அனுமதிக்கக் கூடாது.

நல்லிணக்க அரசு வேகமாகவும் விவேகமாகவும் இதனை கட்டுப்படுத்த அனைத்து இன சமூகங்களுடனும் இணைந்து செயற்பட முன்கையெடுக்க வேண்டும்.

மார்கழி 13

# போராட்டத்தை சின்னாபின்னமாக்கிய ஏக அதிகார ஆசை

ஒரு குளத்தின் அருகே மேய்ந்துகொண்டிருந்த ஆட்டுக்குட்டியை கண்ட ஓநாய் ஒன்று அதனை கொன்று தின்றுவிட வேண்டுமென்று அவாவுற்றது. "குளத்தை கலக்கி நான் நீர் அருந்த முடியாதபடி செய்துவிட்டாய்" என்று கத்தி ஆட்டுக்குட்டியின் மீது குற்றம் சுமத்தியது. "குளத்தின் பக்கமே செல்லவில்லை" என்று பதறியபடி மறுத்தது ஆட்டுக் குட்டி. ஓநாய் தொடர்ந்தது "எனக்கு தெரியும், குளத்தை கலக்கியது உனது சகோதரன் தான்" என்று ஆட்டுக்குட்டியை அதட்டியபடி நெருங்கியது. "எனக்கு சகோதரர்களே கிடையாது" என்று பவ்வியமாய் சொன்னது ஆட்டுக்குட்டி. "ஓ! அப்போ நிச்சயமாய் உனது தந்தையாார் தான், குளத்தை கலக்கி நான் தண்ணீர் அருந்த முடியாதபடி செய்திருக்கிறார் என்பது உறுதியாகிவிட்டது" என்று கூறி ஆட்டுக்குட்டியை கொன்று, புசித்து தனது ஆசையை தீர்த்துக் கொண்டதாம் ஓநாய்.

ஈபிஆர்எல்எவ் மீது புலிகள் தாக்குதல் நடத்தியதற்கு காரணம் கேட்பவர்கள் இந்த கதைக்கூடாகவே காரணத்தை விளங்கிக் கொள்ளலாம்.

ஈபிஆர்எல்எவ் மீதான தாக்குதல் மட்டுமல்ல ரெலோ மீது தாக்குதல் தொடுத்தார்கள், ரெலோ உறுப்பினர்கள் நூற்றுக்கணக்கானவர்களை கொன்றார்கள், தமிழ் சமூகத்தை பீதியூட்ட வேண்டும் என்பதற்காகவே அவர்களிற் பலரை உயிரோடு தீயில் போட்டு எரித்தார்கள், பின்னர் புளொட் இயக்கத்தினரை அச்சுறுத்தி, அரசியல் நடவடிக்கைகளை நிறுத்துவதாக பத்திரிகைகளுக்கு அறிக்கை விடச் செய்தார்கள். இதன் தொடர்ச்சியாக 1986 மார்கழி 13 அன்று ஈபிஆர்எல்எவ் மீது தாக்குதல் தொடுத்தார்கள். ஈரோஸ் இயக்கத்தை தடை செய்யாமல் விட்டிருப்பதாக தம்மை நியாயப்படுத்தியும் கொண்டார்கள். இந்த தாக்குதல்களுக்கான காரணத்தை புலிகளிடம் கேட்காததும், புலிகளாக சொன்ன காரணங்களை பகுத்தறிவோடு ஆராய்ந்து பார்க்கத் தவறியதும் கூட இன்றைய கையறு நிலைக்கு காரணமாகும்.

புலிகள் இயக்கத்துடன் இணைந்து களத்தில் நின்று போராடியவர்கள், புலிகளின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தவர்கள் பலர் சக இயக்கங்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்களில் தமக்கு உடன்பாடில்லை. தாக்குதலுக்கான காரணம் குறித்துக் கேட்க முடியவில்லை. தவிர்க்க முடியாத சூழ்நிலையால் அத்தாக்குதலில் பங்கெடுக்க நேர்ந்தது என பகிரங்கமாக தெரிவித்துவரும் நிலையில் முகநூல் மாவீரர்கள் சில புலிகளின் இந்த அழித்தொழிப்புக்களுக்கு காரணம் கற்பிக்க முனைகின்றனர்.

1986 மார்கழி 13 இல் ஈபிஆர்எல்எவ் மீது தாக்குதல் நடாத்திய புலிகள் அதனை நியாயப்படுத்த முடியாமல் "எம்மீது தாக்குதல் நடாத்த திட்டம் தீட்டினார்கள் நாங்கள் முந்திக் கொண்டோம்" என்றே பொதுவெளியில் கூறினார்கள். 1986 இற்கு பின்னர் பிறந்தவர்கள் மற்றும் பருவமெய்தியவர்களிடம் சக இயகத்தவர்களை சமூக விரோதிகள், துரோகிகள் என்று கூறிவருவது போன்று அன்று புலிகளால் மக்களிடம் கூற முடியவில்லை.

புலிகள் நடாத்திய இந்த தாக்குதல்களை "இயக்க மோதல்" என்று தங்களுக்கு வசதியாக- புலிகள் மீதுள்ள அபிமானம் காரணமாகவும், அச்சம் காரணமாகவும் இன்றுவரை சொல்லப்பட்டும், எழுதப்பட்டும் வருகின்றபோதும் நடந்தது மோதல் இல்லை. புலிகள் இராணுவ முகாம் ஒன்றின் மீது எவ்வாறு இரகசியமாகவும், சடுதியாகவும் தாக்குதலை மேற்கொள்வார்களோ அதே போன்று மார்கழி 13 மாலைக் கருக்கலில் ஈபிஆர்எல்எவ் முகாம்கள், அலுவலகங்கள், உறுப்பினர்களின் தங்குமிடங்களை சுற்றி வளைத்து தாக்குதல் நடாத்தினார்கள். புலிகள் தாக்குதல் நடாத்துகிறார்கள் என்பதை புரிந்துகொள்வதற்கு முன்பாகவே பல முகாம்கள் தாக்குதலுக்கு இலக்கானது.

இந்த தாக்குதல்களின் போது எவ்வித குற்றமும் இழைக்காத பலர் கொல்லப்பட்டார்கள், ஆண்கள், பெண்கள் என்ற வரையறையின்றி ஆயிரக்கணக்கானவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டார்கள், சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள், அவமானப்படுத்தப்பட்டார்கள் இந்த தாக்குதலைத் தொடர்ந்து பலிகளின் அறிவித்தலின்படி புலிகளிடம் சரணடைந்தவர்கள், பெற்றோர்களால் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் எனப் பலர் பின்னர் அவர்களது குடும்பத்தாரிடம் சடலமாகக் கூடக் கையளிக்கப்படவில்லை.

இதே சமூகத்தில் முள்ளிவாய்க்காலில் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த புலிகள் காணாமல் போனது குறித்து சர்வதேச நீதி விசாரணை நடாத்தப்பட வேண்டுமென கோரிக்கை முன்வைக்கப்படுகிறது. கடந்த காலத்தில் புலிகளால் கைது செய்யப்பட்டவர்கள், புலிகளிடம் சரணடைந்தவர்கள் தொடர்பில் நீதி விசாரணை வேண்டாம் உண்மையை அறிவதற்கான அக்கறையாவது காட்டப்பட்டதா? காட்டப்படுமா?

சமூக அமைப்புக்களின், இயக்கங்களின் தவறுகளை மக்களுக்கு சுட்டிக்காட்டுகின்ற கடமை, பொறுப்பு சமூகத்தில் செயற்படுகின்ற எந்த ஒரு அமைப்புக்கும் நபருக்கும் இருப்பதை போன்று புலிகளுக்கும் இருக்கிறது. ஆனால், தவறிழைத்தவர்களை நிராகரித்துத் தண்டிக்கின்ற பொறுப்பு மக்களுடையதே தவிர எந்த இயக்கதிற்குமுரியதில்லை. இருப்பினும் புலிகள் தீர்ப்பு வழங்கும் பொறுப்பை தமது கையில் எடுத்து எழுந்தமானமாக நடந்துகொண்டார்கள். இதுவே சமூகத்தில் பல விரும்பத்தகாத விளைவுகளுக்குக் காரணமாய் அமைந்தது.

கல்வியில் சிறந்ததெனப் பெருமைப்பட்டுக்கொள்ளும் தமிழ் சமூகம் இன்றுவரை இது குறித்து கேள்வியெழுப்பவில்லை. மாறாக எல்லா இயக்கங்களும் பிழை விட்டவை என்று தப்பித்துக்கொள்கிறது.

ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ், தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை, என்.எல்.எவ்.ரி உட்பட தமிழ் மக்கள் மத்தியில் உருவான அத்தனை ஆயுதந் தாங்கிய இயக்கங்களினதும் சுயாதீனமான அரசியல் பங்களிப்பிற்கு புலிகள் தடை விதித்தனர். அவ்வாறு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் அவர்களுக்கு உதவுபவர்கள் கொல்லப்பட்டு வந்த நிலையில் இந்த இயக்கங்கள் மக்கள் மத்தியில் பகிரங்கமாகச் செயற்படுவதற்கான வாய்ப்புக்களை இழந்தன.

இதனைத் தொடர்ந்து வெகுஜன அமைப்புக்களும், அரச நிறுவனங்கள், திணைக்களங்கள், கல்விக் கூடங்கள், இதர பொதுத்துறைகள், ஊடகங்கள், கலை இலக்கிய முயற்சிகள் அனைத்தும் புலிகளின் ஆதிக்கத்தின் கீழ் செயற்பட வேண்டியிருந்தன. புலிகளின் பயிற்றுவிப்புக்கள், போதனைகளிலிருந்து எவரும் தப்பமுடியவில்லை. குறித்த காலப் பகுதியில் வாழ்ந்த சமூகம், ஒரு இளம் தலைமுறை புலிகளின் பிரச்சாரத்தை மட்டுமே அறிந்து, தெரிந்து, நம்பி நிற்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளானது. தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் பங்கெடுத்துக்கொண்ட தலைவர்கள் இதர இயக்கங்கள் தொடர்பாகவும் குறித்த காலப்பகுதியில் வாழ்ந்த இளைஞர் யுவதிகள் புலிகளுக்கூடாகவே தெரிந்துகொண்டிருக்கிறார்கள். துரோகிகள், துணைப்படைகள் என புலிகள் தெரிவித்தவற்றையே அனேகமானவர்கள் நம்பிக்கொண்டும் இருக்கிறார்கள். புலிகளை வைத்து பிழைப்பு நடாத்த கிளம்பியிருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் சிலரும், சில ஊடகங்களை சேர்ந்தவர்களும் இதனையே தமது மூலதனமாக ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள். எதிர்கால சந்ததி சுதந்திரமாக உண்மைகளை கண்டறிவதற்கான தேடலை மேற்கொள்ள முன்வர வேண்டும். மாயைகளை விலக்க வேண்டும்.

## தோழர்களே! நண்பர்களே! வாசகர்களே!


அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும் , ஆக்கங்களையும் வரவேற்கிறோம்.

தொடர்புகளுக்கு :-

இல: 294 A, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிடல் மானிட விடுதலை வரலாற்றின் அழுத்தமான குறியீடு



எம்காலத்தின் நாயகன் பிடல். பிடல் காலத்தில் நாமும் வாழந்தோம் என்பது எமக்கொரு பெருமிதத்தைத் தருகிறது.

மார்க்ஸ் மரணித்த போது இரங்லுரையாற்றிய ஏங்கல்ஸ் எம்காலத்தின் மாபெரும் சிந்தனையாளன் தான் சிந்திப்பதை நிறுத்திக் கொண்டான் என்று குறிப்பிட்டார்.

தற்போது மார்க்சிய வழி சிந்தனை யாளன் செயற்பாட்டாளன் தனது சிந்தனையையும் செயற்பாட்டையும் நிறுத்திக் கொண்டான்.

உலகளாவிய ஒடுக்கப்பட்ட மக்களின நம்பிக்கை நடசத்திரம் பிடல்.

ஒடுக்கப்பட்ட மக்களின் சர்வதேசியம் அந்த மகத்தான உள்ளத்திலே குடி கொண்டிருந்தது.

அமெரிக்காவின் அருகிருக்கும் கியூபா என்ற அந்த தீவு உலகத்திற்கு ஒடுக்கப்பட்ட தேச மக்களுக்கு விடுதலை என்ற செய்தியை சொல்லிக் கொண்டிருந்தது.

அந்த கியூபா பிரசவித்த மகத்தான ஆழுமை.

சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்டபலர் நாளடைவில் உள்ளம் சிதைந்து போனார்கள்.

பிடல் விதிவிலக்கு. புரட்சியில் பங்கெடுத்த நாளில் இருந்து அதே உன்னதமான கனவுகளுடன் தனது இறுதி மூச்சுவரை வாழ்ந்தவர் .

அந்த ஆளுமை இலத்தீன் அமெரிக்கர்களை மாத்திரமல்ல. ஐந்து கண்டங்களையும் ஆகர்சித்தது.

பஞ்சமும் நோயும் பாழ்பட்டு வறுமை மிஞ்சிய மக்களுக்கெல்லாம் அவர் நம்பிக்கை நட்சத்திரம்.

நீதியான உலகினைப் படைக்கமுடியும் என்பதை இறுதி மூச்சுவரை நிலைநாட்ட முயன்றவர். உலகின் பல தேசங்களில் விடியல் கீதங்களை இசைக்கப் பங்களித்தவர்.

மூன்றாம் உலகின் உண்மையான தலை சிறந்த நண்பன் தோழன். 1950களின் முற்பகுதியில் கொடுங்கோலன் பட்டிஸ்டாவின் மன்காடா இராணுவ முகாம் தாக்குதலில் கைது செய்யப்பட்ட பிடல் இராணுவ நீதிமன்றத்தில் "வரலாறு என்னை விடுதலை செய்யும்" என்ற புகழ்பூத்த உரையை ஆற்றினார்.

அது மாநிட நேயத்தின் பிரகடனம். நாம் யாருடைய விடுதலைக்காகப்போராடுகிறோம் எத்தனை கனவுகள் எம்முள் எழுந்தன என்று உலகமாநிட மனச்சாட்சியை தொடும்படியாக உரையாற்றினார்.

அன்றைய அணிசேரா நாடுகளாகட்டும், அங்கோலா நமீபியாவின் விடுதலையாகட்டும், தென்னாபிரிக்க தேசிய விடுதலைப்போராட்டமாகட்டும்

பிடலின் கியூபாவின் அழுத்தமான பிரசன்னம் இருந்தது.

யுக புருசன்

தனது இறுதி நாட்கள் வரை சாதாரண மக்களின அதிகாரம் பற்றிய தனது நம்பிக்கைகளை கைவிடவில்லை.

அமெரிக்காவின் படலையில் சாமானியர்களின் அதிகாரத்தை நிலை நாட்டியவர்.

லத்தீன் அமெரிக்காவின் விடிவெள்ளியாக எழுந்தவர்.

நூற்றுக்கணக்கான படுகொலை சதிகளில் இருந்த தப்பித்தவர்.

எண்ணற்ற பொருளாதார தடைகள் மத்தியில் கியூபாவை- லத்தீன் அமெரிக்காவின் பல நாடுகளை கம்பீரமாக எழுந்து நிற்கச் செய்தவர்.

கல்வி வைத்திய துறைகளில் மாபெரும் மறுமலர்ச்சி பிடலின் கியூபாவில் நிகழ்ந்தது.

இந்த மறுமலர்ச்சி கியூபாவுடன் நிற்கவில்லை . பாழ் பட்டுவறுமை மிஞசிய உலக மானிடத்துடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

பயங்கர நோய்கள் ,பெரு வெள்ளம் யுத்தப் பேரழிவுகள் நிகழ்ந்த இடங்களுக்கெல்லாம் கியூபாவின் வைத்திய சேவை கிடைத்தது. இறுதியாக எபோலா தாக்கிய மேற்கு ஆபிரிக்காவிற்கு, கியூப மருத்துவக் குழு உடனடியாக விரைந்தது.

பொருளாதார தடைகள் எத்தனையோ ஏகாதிபத்திய கெடுபிடிகள் மத்தியில் கியூபா கைமாறு கருதாது தனது சர்வதேச சகோதரத்துவத்தை உறுதிப்படுத்தியது.

அங்கோலா நமீபியா தென்னாபிரிக்க விடுதலைக்கு கியூபா தோள் கொடுத்தது.

மண்டெலா கொடுஞ்சிறையில் இருந்தபோது வின்னி மண்டெலா ஊடாக விருது வழங்கி கௌரவித்தது.

நிறவெறி காலனி ஆதிக்கம் ஏகாதிபத்திய சுரண்டல் சூறையாடல் இவற்றுக்கெதிராக உறுதியாக நின்றது கியூபா.

அமெரிக்காவால் 1960களின் முற்பகுதியில் தொடுக் கப்பட்ட பன்றி வளைகுடா நெருக்கடி மற்றும் 1962 இல் அணுவாயுத யுத்தம் மூழலாம் என்று கருதப் பட்ட ஏவுகணை நெருக்கடி எல்லாவற்றையும் தாண்டியது பிடலின் கியூபா

உலகின் பொதுவுடைமை முகாம் நேருவின் தலை மையிலான இந்தியா சுகர்ணோவின் தலைமை யிலான இந்தோனேசியா உட்பட சோசலிச சமூக ஜனநாயக உலகின் உயிர்த்துடிப்புள்ள நண்பனாக தன்னை வரிந்து கொண்டது 1959 புரட்சியின் பின்னான கியூபா.

சேகுவேரா இந்த நாடுகளுக்கெல்லாம் நட்புறவுப் பயணம் மேற்கொண்டார். அணிசேரா இயக்கதின் நிகரற்ற நண்பர். உற்சாகமான பங்காளர்

லத்தீன் அமெரிக்காவில் ஏற்பட்டு வரும் எழுச்சிகளின் மூலவிசை பிடல்.

கருத்துவேறுபாடுகளையும் நாகரிகமான முறையில் எதிர் கொள்பவர்.

அவருடைய முகம் குரல் இறுகியதாக இருப்பதில்லை.

அவருடைய பேச்சாற்றல் பிரமிக்கவைப்பது.

இலத்தீன் அமெரிக்கர்களை கிளர்ச்சி கொள்ளவைப்பது.

அவரது ஐ. நா உரையொன்று மிகப்பிரபலமானது. 4 மணிநேரத்திற்கு மேல் நீடித்தது. இதுவரை அவவளவு நேரத்திற்கு யாரும் உரையாற்றவில்லை.

1990 சோவியத் உடைவிற்கு பின்னும் சோசலிசப்பதாகையை உயர்த்தியபடி அந்த சின்னஞ்சிறு தீவு நிமிர்ந்து நின்றது.

அமெரிக்காவை கதரினா புயல் தாக்கியபோது கியூபாவில் இருந்து வைத்தியர்களை அனுப்பிவைக்கவா என்று கேட்டவர்.

பாப்பரசரை வரவேற்க அவர் பின் நிற்கவில்லை.

அண்மையில் சரித்திர முக்கியத்துவம் வாயந்த ஒபமாவின் கியூபா பயணம் நிகழ்ந்தது. அமெரிக்க கியூபா இராஜதந்திர உறவு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது .

விடாப்பிடியான கொள்கை உறுதியுடன் அவர் உலகளாவிய உறவுகளைப்பேணினார்

மார்க்சின் கனவுகளின் வாரிசு.

அக்டோபர் புரட்சியின் தெடர்ச்சிக்கு உறுதுணையாக நின்ற சர்வதேசியவாதி.

உலகின் இளம்புரட்சியாளர்களின் உன்னத வழிகாட்டி.

தோழர் பிடலின் நினைவுகள் மனித நேய நெஞ்சங்களில் தலைமுறைகள் தாண்டி நிலைக்கும்.

**தோழர் சுகு- ஸ்ரீதரன்**





## நூல் வெளியீடு ...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

ஜெயக்குமார் அவர்களும் நிகழ்த்தினர். முதற்பிரதியைச் சைவப்புரவலர் வி.றஞ்சித மூர்த்தி அவர்கள் பெற்றுக்கொண்டார். கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அகில இலங்கை தமிழர் மகா சபைத் தலைவர் கலாநிதி கா.விக்கி னேஸ்வரன் அவர்களும், ஈழமக்கள் ஜன நாயகக்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத் தித் திரு.மார்டின் ஜெயா அவர்களும், தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் தலைவர் தி.சிறிதரன் (சுகு) அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர். மாகாண சபை உறுப்பினர்களான திரு.இரா.துரை ரட்ணம் மற்றும் ஞா.கிருஸ்ணபிள்ளை (வெள்ளிமலை) ஆகியோரும் கலந்து கொண்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்கள் மின்னஞ்சலில் அனுப்பிய செய்தி வாசிக்கப்பட்டது.

இந்நூலிலுள்ள கட்டுரைகள் யாவும் தினக்குரல் பத்திரிகையின் வாரப்பதிப்பில் ஏற்கனவே வெளிவந்தவையாகும்.

"தமிழர் அரசியலில் மாற்றுச் சிந்தனை கள்" என்ற எனது நூல் வெளியீட்டு நிகழ்விற்கு சகல தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களையும், பாராளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்களையும் அழைத்திருந்தேன். அவர்களுடன் பேசி அவர்களுடைய சம்மதத்துடனேயே அழைப்பிதழில் அவர்களுடைய பெயர் களை குறிப்பிட்டிருந்தேன்.

அழைப்பிதழில் 'கட்சி அரசியலுக்கு அப்பால் கலந்துரையாடுவோம்' என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இறு திக்கட்டத்தில் இந்நூல் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை விமர்சிக்கிறது என்று காரணம் கூறி தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ளக் கூடாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக் கட்சியான தமிழரசுக் கட்சி தடை விதித் ததால் அழைப்பு அதிதிகளாக அழைக் கப்பட்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பிரமுகர்கள் கலந்து கொள்ளா மல் விட்டது மட்டுமல்லாமல் அதன் காரணமாக இந்நூலை ஆய்வு செய்ய விருந்த சட்டத்தரணி ஸ்ரீகந்தராசா அவர் களும் நிகழ்வில் கலந்துகொள்ளாமல் பின் வாங்கிவிட்டார். இந் நூல் வெளியீட்டு நிகழ்வு பிசுபிசுத்துப் போகவேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குறுகிய எண்ணமாயிருந்தது என்பதைப் பகிரங்கமாக இங்கே பதிவுசெய்ய விரும் புகின்றேன். தமிழ் அரசியல் சூழல் இவ் வாறுதான் இன்று ஆரோக்கியம் கெட்டுக் காணப்படுகிறது என நூலாசியர் செங் கதிரோன் த. கோபாலகிருஸ்ணன் தனது ஏற்புரையின் போது தெரிவித்தார்.

தமிழ்ச்சமூகத்திலுள்ள நடுநிலையாளர் களும் மாற்றுச் சிந்தனையார்களும் தமிழ் அரசியல் கட்சிகளிலே அது எந்தக் கட்சி யென்றாலும் சரி அங்கம் வகிக்கின்ற நியாய புத்தியுடையவர்களும் சிந்தித்து எதிர்காலத்தில் தமிழ்ச் சமூகத்தை சமூக பொருளாதார ரீதியாக மேம்பாடடையச் செய்வதற்கான செயற்பாட்டுத்திறன் மிக்க ஓர் உண்மையான நேர்மையான ஐக்கியப் பட்ட மாற்று அரசியல் பொறிமுறையைப் பற்றியதான கலந்துரையாடலுக்கு முன்வர வேண்டும் எனவும் திரு. த.கோபலகிருஷ் ணன் அவர்கள் அனைவரிடமும் வேண்டு கோள்விடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2017 நல்லாட்சியின் வரவு செலவுத் திட்டம்

## அரசாங்க வருமானம் உயர மக்கள் மீது வரிச்சுமைகள்!
## அந்நியருக்கும் வியாபாரிகளுக்கும் அள்ளு சலுகைகள்!
## நாட்டு மக்களுக்கோ நன்மைகள் கிள்ளித் தெளிப்பு!

2017ம் ஆண்டுக்கான இலங்கை அரசின் வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்டுவிட்டது. எதிர்க்கட்சித தலைவரின் ஆதர்ச பிரதிநிதி சுமந்திரன் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தை விமர்சிப்பது போல ஒரு பாவனையில் உரையொன்றை ஆற்றினார். எதிர்க்கட்சி வரிசையில் இருந்த பெரும்பான்மையினர் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தை கடுமையாக எதிர்த்த போதிலும் உத்தியோக பூர்வ எதிர்க்கட்சித் தலைவர் இரா சம்பந்தனதும் அவரது கூட்டமைப்புக் காரர்களதும் எதிர்ப்பு இல்லாமலே ஐ.தே.க – சுதந்திரக் கட்சி கூட்டாட்சியினர் தமது வரவு செவவுத் திட்டத்தை மிகப் பெரும்பான்மையான பா. உ க்களின் ஆதரவுடன் சட்டமாக நிறைவேற்றிக் கொண்டனர்.

2017 ஆம் ஆண்டு இலங்கை வறுமையை ஒழித்துக் கட்டிய நாடாக அமையும் என ஜனாதிபதி சிறிசேனா அவர்கள் நாட்டு மக்களுக்கு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டும் சரி இந்த ஆண்டும் சரி பிரதமர் ரணில் அவர்கள் வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பாக தமது அரசாங்கத்தின் சமூக பொருளாதார கொள்கை நிலைப்பாடுகளை அறிவிப்பது வழக்கமாகியுள்ளது. அவ்வாறான அவரது அறிவிப்பில்,

1) நாட்டின் பொரளாதாரம் வருடத்துக்கு 7 சத வீதமாக வளர்ச்சியடையும்;

2) சீனா, இந்தியா, யப்பான் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடனான பொருளாதார ஒப்பந்தங்கள் மூலம் நாடு இந்தப் பிராந்தியத்தில் உலக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளாதார மையமாக அமையும்;

3) டிஜிட்டல் பொருளாதாரம், உல்லாசத்துறை, வர்த்தகரீதியான விவசாயம், மற்றும் உற்பத்தி தொழில் துறைகளில் விரைந்த முன்னேற்றங்களை ஏற்படுத்தும் விதமாக அரச மற்றும் தனியார் துறைகளில் அதிகரித்த முதலீடுகள் இடப்படுவதற்கான அபிவிருத்தி வழிகள் திறக்கப்படும்

என பிரகடனப்படுத்தியுள்ளார்.



பாராளுமன்றத்தில் நிதி அமைச்சர் ரவி கருணநாயக்க

ஜனாதிபதியும் பிரதமரும் அறிவித்துள்ள இலக்குகளை அடையும் விதமாகவே தமது வரவு செலவுத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணநாயக்க தமது வரவு செலவுத் திட்ட உரையில் அறிவித்துள்ளார். கௌரவ அமைச்சர் அவர்கள் தமது வரவு செலவுத் திட்ட அறிக்கையின் முகவுரையை மேலோட்டமாக வாசிப்பவர்களுக்கு மிக கவர்ச்சிகரமாகவே தயாரித்துள்ளார்.

முற்போக்கான பொருளாதார சீர்திருத்தங்களினூடாக பசுமையானதும் புதுமைகளை அடிப்படையாகக் கொண்டதுமான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே தமது தேசிய அபிவிருத்தி மூலோபாயம் எனவும், சமூக நலன் விடயங்களை உள்ளடக்கியபடி பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துவதையே தமது 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பருமட்டான கொள்கைகளாகக் கொண்டிருப்பதாகவும் நிதி அமைச்சர் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

சமூக நலன்களை உள்ளடக்குதல் என்பது ஜனாதிபதி குறிப்பிட்டுள்ள வறுமை ஒழிப்பு என்பதோடு, ஐக்கிய் நாடுகள் சபை 2030ம் ஆண்டுக்குள் “அனைவருக்கும் வீடு”, “சுத்தமான குடிநீர் வாய்ப்பு” மற்றும் “முன்னேற்றகரமான வாழ்க்கைத்தரம்” ஆகியவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ள இலக்குகளையும் தமது வரவு செலவுத் திட்டத்தின் இலட்சியங்கள் உள்ளடக்கியுள்ளதாக நிதி அமைச்சர் அடையாளம் காட்டுகிறார்.

இவற்றையெல்லாம் அழகாகக் குறிப்பிடும் அமைச்சர் தமது வரவு செலவுத் திட்டம் முனைகின்ற பொருளாதார உபாயம் என்பது தனியார் துறையை வலுப்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்தல்களை அடிப்படையாகக் கொண்டதே என மிக ஆணித்தரமாகவே வலியுறுத்துகிறார்.

தனியார்துறையை ஊக்கப்படுத்தி ஊட்டி வளர்ப்பதன் மூலமே தாம் ஆசைப்படும் பொருளாதார அபிவிருத்தியை அடைய முடியும் என்பதே நிதி அமைச்சரின் தெளிவான நிலைப்பாடாக உள்ளது. தனியார்துறையே “பொருளாதார வளர்ச்சிக்கான இயந்திரம்” என வலியுறுத்தியுள்ள நிதி அமைச்சர் நாட்டின் பொருளாதார செயற்பாடுகளில் தனியார்துறையின் பங்கை அதிகரிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளையம் சூழல்களையும் உறுதிப்படுத்துவது அவசியம் எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே, அதற்கு

( தொடர்ச்சி 10 ஆம் பக்கம் )

## வெள்ளையரிடமிருந்து சுதந்திரமடைந்த இலங்கையை ஜே.ஆர். அந்நியர்களுக்கான தரகர்களின் நாடாக்கினார்

1970 – 1977ம் ஆண்டு இடைவெளியில் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் அமைந்த ஆட்சியின் காலத்தில் நாட்டின் பெரும்பாலான மக்கள் தமக்குத் தேவையான அடிப்படைப் பொருட்களை வாங்குவதற்காக நீண்ட கியூக்களில் நிற்க வேண்டி ஏற்பட்டதாலும் நாட்டில் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைப் பண்டங்கள் பற்றாக்குறையாக விநியோகிக்கப்பட்டதாலும் ஆத்திரமடைந்தார்கள். அதுவே ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் திறந்த பொருளாதார அணுகுமுறையை மக்கள் விவாதத்திற்கு இடமின்றி வரவேற்பதற்கு காரணமாகியது.

நாட்டை திட்டவட்டமாக திறந்த முதலாளித்துவப் பாதையில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா இட்டுச் செல்கிறார் என்பதில் அப்போது எவருக்கும் சந்தேகம் இருக்கவில்லை. நாட்டின் பணக்கார வர்க்கம் மட்டுமல்ல பெரும்பான்மையான கீழ்தட்டு மத்திய வர்க்கமும் அதனை மனப் பூர்வமாக வரவேற்றது.

1977ம் ஆண்டு ஜே ஆர் ஜெயவர்த்தனாவின் தலைமையில் நிதி அமைச்சராக இருந்த றொனி டி மெல் அவர்கள் முன்வைத்த வரவு செலவுத் திட்டம் தொழில் ரீதியாக விருத்தியடைந்த நாடுகளின் மூலதனங்களுக்கும், நாட்டிலுள்ள ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகளுக்கும் வசதியாக நாட்டின் பொருளாதாரத்தை திறந்து விட்டது.

இலங்கையை சிங்கப்பூரின் நிலைக்கு ஆக்கப்போவதாக ஜே ஆர் பிரகடனம் செய்தார். தமது பொருளாதாரத் திட்டம் மூலம் வெளிநாடுகளின் விருத்தியடைந்த விஞ்ஞான தொழில் நுட்பங்கள் நாட்டுக்குள் வரும்; அதன் மூலம் நாட்டில் உற்பத்திகள் பெருகும்; அதன் மூலம் நாட்டில் வேலைவாய்ப்புக்களின் அதிகரிப்பு துரிதமாகும்; நாட்டில் சந்தைப் போட்டிகளின் அடிப்படையிலான தொழில் வளர்ச்சிகள் ஏற்படுவதால் மக்களின் வாழ்க்கைத் தராதரத்திலும் செழிப்புகள் ஏற்படும் என்றார்.

ஆனால். உண்மையில் நடந்தவை என்ன? அவரது ஆட்சிக் காலத்தில் சுயபொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்நாட்டில் இருந்த தொழில் உற்பத்தி நிறுவனங்களெல்லாம் மூடப்பட்டன. வேலைவாய்ப்புக்களுக்காக இலட்சக்கணக்கானோர் மத்திய கிழக்கு நாடுகளையும் தென்கிழக்காசிய நாடுகளையும் நோக்கிச் சென்றனர். அடுத்தடுத்து நாடு இனக்கலவரங்களைக் கண்டது, அது இனமுரண்பாடான போருக்கு வழிவகுத்தது. இதனால் பத்து லட்சம் தமிழர்கள் பாதுகாப்பு மற்றும் பொருளாதார வாய்ப்புகளைத் தேடி அகதிகளாக மேலைத்தேச நாடுகளை நோக்கி ஓடினர்.

சுதந்திர வர்த்தக வலயத்துக்கு அப்பால் வெளிநாடுகள் எதுவும் நாட்டில் உற்பத்தித் தொழில் துறைகளில் முதலிடவுமில்லை; நாட்டுக்குள் உற்பத்தித் தொழில்களுக்கான புதிய தொழில் நுட்பங்களை கொண்டு வரவுமில்லை; வேலைவாய்ப்புகளை உருவாக்கவுமில்லை. மாறாக வெளிநாடுகளின் உற்பத்திகளே நாட்டின் சந்தைகளை நிறைத்தன. வெளிநாடுகள் இலங்கையில் தமது நிதி நிறுவனங்களையும் ஆடம்பர ஹோட்டல்களையுமே திறந்தன. வெளிநாடுகளில் கடன் வாங்காவிட்டால் நாட்டை அரசாள முடியாது என்ற நிலைமை உருவாக்கப்பட்டது. இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடுகளின் நவ காலனித்துவத்துக்கு உட்பட்ட தரகு முதலாளித்துவ நாடாக மாற்றியமைத்ததே ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் சாதனை!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையில் காசில்லா பாரதமே
# நரேந்திர மோடியின் ராமராஜ்ஜியம்

**கடந்த நவம்பர் மாதம் 8 ஆம் திகதி இரவு இந்தியாவின் அனைத்து மக்களையும் கலக்கிய, குழப்பத்தில் ஆழ்த்திய பகிரங்க அறிவிப் பொன்றை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். அதாவது பழக்கத்தில் இருக்கும் 500 ரூபா மற்றும் 1000 ரூபா தாள்கள் செல்லுபடி அற்றவையாக ஆக்கப்படுவதாகவும், எனவே அவற்றை உடனடியாக வங்கிகளில் வைப்புச் செய்யும் படியும் அறிவித்தார். வங்கிகளில் பணம் வைப்புடையோர் வங்கிகளிலிருந்து ஒரு நாளைக்கு 4000 ரூபாவை காசோலை மூலமாகவும், ஒரு நாளைக்கு 2000 ரூபா என வங்கிகளின் யந்திரங்களிலிருந்தும் மீளெடுத்துக் கொள்ளலாம் எனவும் அறிவித்தார்.**



இந்தியாவின் மோடியின் இந்த நடவடிக்கை 1970 ஆம் ஆண்டு அப்போதைய இலங்கையின் நிதியமைச்சர் என்.எம்.பெரேராவின் பணமாற்ற நடவடிக்கையை நினைவுபடுத்துவதாக இருந்தது. என். எம். பெரேராவின் நடவடிக்கை அப்போது சாதாரண மக்களின் நாளாந்த நடைமுறை வாழ்க்கையைப் பாதிப்பதாக இருக்க வில்லை. ஏனெனில், பழைய பணத் தாள்களுக்குப் பதிலாக புதிய பணத்தாள்களை மாற்றிக் கொடுப்பதற்கு வங்கிகளில் கையிருப்பில் போதிய பணம் இருந்தது. ஆனால், எந்தவித முன்னறிவிப்பும் முன்தயாரிப்பும் இல்லாமல் மோடி அவர்கள் எடுத்த நடவடிக்கையால் இந்தியா முழுவதுவும் வெறும் பணக்காரர்கள் மட்டு மல்ல அனைத்து சாதாரண இந்திய மக்களும் பெரும் சங்கடங்களுக்குள் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

நாட்டிலுள்ள கறுப்புப் பணத்தை இல்லாமற் செய்வ தற்கும், கள்ள நோட்டுகளின் புழக்கத்தை இல்லாமற் செய்வதற்கும், பயங்கரவாதிகளின் கைகளில் இருக்கும் பணங்களை பெறுமதி அற்றவையாக ஆக்குவதற்குமே இந்த திடீர் நடவடிக்கையை தாம் எடுத்திருப்பதாக பிரதமர் மோடி அறிவித்தார். கறுப்புப் பணக்காரர்களும் கள்ள நோட்டுக்காரர்களும் தமது பணத்தை நல்ல நோட்டுகளாக மாற்றுவதற்கு கால இடைவெளி கொடுக் கக் கூடாது என்பதற்காகவே திடீர் நடவடிக்கை எடுத் ததாக அறிவித்திருக்கிறார்.

தமது கையிருப்பில் இருக்கும் 500 ரூபா மற்றும் 1000 ரூபா நாணயத் தாள்களை அரசாங்கம் செல்லுபடியற்ற தாக ஆக்கியதையிட்டு அதிர்ச்சியுற்றாலும் இந்திய நாட்டின் சாதாரண மக்களிற் கணிசமானோர் தமது பிரதமரின் நடவடிக்கைகளின் நோக்கங்கள் நியாய மானவை; அவசியமானவை என்ற கருத்தையே கொண்டிருக்கின்றனர். மக்களுக்கான இந்தச் சிரமங்கள் ஒரு குறுகிய காலத்துக்கு மட்டுமே எனவும் அதன் பின்னர் நாடு பொருளாதார செழிப்பை நோக்கி மிக வேகமாக முன்னேற்றமடையும் எனவும் இந்திய ஆட்சி யாளர்களும் அவர்களின் பிரமுகர்களும் கூறி வருவதை பெரும்பாலான மக்கள் நம்புகிறார்கள் என்பதை மறுப் பதற்கில்லை.

இந்தியாவில் மொத்தமாக புழக்கத்தில் இருந்து வந்த பணத்தின் பெறுமதி 17 லட்சம் கோடி ரூபாக்கள். இதில் 500 ரூபா மற்றும் 1000 ரூபா நோட்டுக்களின் பெறுமதி சுமார் 14 லட்சம் கோடி ரூபாக்கள். இப்போது செல்லுபடியற்றதாக ஆக்கப்பட்டுள்ள நாணயத் தாள் களின் எண்ணிக்கை 2300 கோடியாகும். ஆனால் அவர் கள் எவரும் வங்கிக் காசோலைகளுடனோ, வங்கி யிலிருந்து காசெடுக்கும் அட்டைகளுடனோ தொடர்புடை யவர்கள் அல்ல.

2014ம் ஆண்டு இந்தியப் பிரதமரான நரேந்திர மோடியின் முக்கியமான வாக்குறுதிகளில் ஒன்று இந்தியாவை டிஜிட்டல் நாடாக ஆக்குவது. தொடர்பு சாதன தொழில் நுட்ப அபிவிருத்தியில் இந்தியா காலம் தாழ்த்தியே காலடி எடுத்து வைத்ததாயினும் கடந்த முப்பது ஆண்டு களுக்குள் இந்தியா இத்தொழில்நுட்ப் துறையில் பெரும் சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. இத் தொழில் நுட்பம் தொடர்பான கருவிகளையும் அவற்றிற்கான பாகங்களை யும் உற்பத்தி செய்வதில் மேலைத் தேய நாடுகள் மற்றும் சீனாவோடு ஒப்பிடுகையில் இந்தியா பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. எனினும் இத்தொழில் நுட்பக் கருவிகளைப் பாவிப்பதற்கான மென் பகுதி (Software) களைத் தயாரிப்பதில் இந்தியர்கள் முன்னணியில் உள்ளனர். எனவே இந்தியா பணக்கொடுக்கல் வாங் கல்ளை டிஜிட்டல் வகையான செயற்படுத்துவதற்கான தொழில்நுட்ப வல்லமையைக் கொண்ட நாடே.

எவ்வாறாயினும், இந்தியர்களில் மூன்றில் ஒரு பங்கினரே இந்தியாவின் வர்த்தக வங்கிகளில் குறைந்த பட்ச மாயினும் முறையான கணக்குகளை வைத்து வைத்தல் - எடுத்தல்களை மேற்கொள்கின்றனர். இந்தியாவில் மிகக் குறைந்த சதவீதமான கிராமங்களிலேயே வங்கிக் கிளைகள் உள்ளன. 70 சதவீதமான இந்திய மக்களைக் கொண்ட இந்தியக் கிராமங்களில் வர்த்தக வங்கிகளின் செயற்பாடுகள் மிகக் குறைவே. இவர்களில் மிகப் பெரும்பான்மையினர் வங்கி அட்டைகள் பற்றியோ, பணத்தை மீளெடுக்கும் வங்கி யந்திரங்கள் பற்றியோ எந்தவித அறிவும் அனுபவமும் அற்றவர்கள்.

நகரங்களில் பெரும்பாலான மக்கள், சிறிய அளவிலான சில்லறைக் கடை வர்த்தகர்கள், மற்றும் வீதியோர வியாபாரிகளிடமிருந்தே பொருட்களை வாங்குகின்றனர். அவர்கள் மத்தியில் வங்கி அட்டைகள் ஊடான கொடுக்கல் வாங்கல் நடைபெறுவது இல்லை. இந்த நிலைமையே பஸ்ஸில் மற்றும் ஆட்டோக்களில் பயணம் செய்வோருக்கும் உள்ளது. சாதாரண நகரக் கூலித் தொழிலாளர்கள் தமது வருமானம் பெறுவதையும் அன்றாட செலவுகள் செய்வதையும் வங்கிக் கணக்கினூடாக மேற்கொள்வார்கள் என எதிர்பார்ப்பது வெறும் கற்பனையே.

மக்களை மொபைல் தொலைபேசிகளினூடாக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வைப்பதற்கும், செலவுகளை மேற்கொள்ள வைப்பதற்கும் அரசாங்கமும், பெரும் வர்த்தக நிறுவனங்களும் பல்வேறு வகையிலும் தீவிரமான பிரச்சாரங்களை மேற்கொள்கின்றன. ஸ்மாாட் போன் பாவனையாளர்களிற் கணிசமானோர் தம்மை அதற்கு மாற்றிக் கொண்டனர். ஆனால், அது சாராதண மக்களைச் சென்றடையும் நிலையில் இந்தியா இல்லை.

இந்தத் திடீர் பணத்தாள் மாற்றம் நாட்டுக்கு எந்த நன்மையையும் செய்யப் போவதில்லை எனவும் இதனால் பல மாதங்களுக்கு சாதாரண மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாக வேண்டியேற்படும் என்பதோடு இந்தியப் பொருளாதாரத்துக்கு பாதகமான அம்சங்களே விளையும் என்பதே நோபல் பரிசு பெற்ற அமாத்திய சென் உட்பட இந்தியாவின் பெரும்பான்மையான பொருளாதார நிபுணர்களின் அபிப்பிராயமாகும்.

இந்திய பொருளாதாரத்தில் ஓரளவுக்காயினும் சுமுக நிலை ஏற்பட 6 மாதங்களாயினும் ஆகும் என்பதே பலரதும் மதிப்பீடு. முக்கியமாக இவ்வளவு பணத்தாள் களை அச்சிட சுமார் 6 மாதங்களாகும் என கூறப்படு கிறது. பொது மக்கள் படும் சிரமங்கள் ஒருபுறமிருக்க, நவம்பர் மற்றும் டிசம்பர் மாத கால இடைவெளியில் இந்தியாவின் பொருனாதாரத்துக்கு ஏற்படும் நட்டம் 1 லட்சம் கோடிக்கும் அதிகமாகும் என பொருளாதார ஆய்வு நிறுவனங்கள் கணித்துள்ளன. இந்த இழப்பை ஈடு கட்ட இந்தியா ஒரு நீண்ட கால சோதனைகளைக் கடக்க வேண்டியேற்படும் எனப்படுகிறது.

**இந்திய மத்திய வங்கி இவ்வளவு நாணயத்தாள்களை அச்சிட்டு வங்கிகளுடாக மக்கள் மத்தியில் புழக்கத்திற்கு விடுவதற்கு ஏறத்தாழ 25000 கோடி ரூபாக்களை செலவிட வேண்டும் எனக் கூறப்படுகிறது. ஒரு நாணயத்தாளை அச்சிடுவதற்கு மட்டும் சராசரியாக 5 ரூபாவை செலவிட நேரும்.**

உலகிலேயே இந்தியாதான் தேசிய வருமானத்தோடு ஒப்பிடுகையால் அதிகளவு சதவீதமாக. அதாவது 12 சதவீதமாக பணத்தாள்களை புழக்கத்தில் கொண்டிருக் கின்றது. கிட்டத்தட்ட 90 சதவீதமான மக்கள் பணத் தாள்கள் ஊடாகவே பொருட் கொள்வனவுகள், பெறும் சேவைகளுக்கான செலவுகள் மற்றும் கொடுக்கல் வாங் கல்களை மேற்கொள்கிறார்கள். எனவே, இந்தியப் பிரத மரின் இந்த திடீர் பணத்தாள் மாற்ற நடவடிக்கையால் சில்லறை வாத்தகங்கள் 50 சதவீதத்துக்கு மேல் பாதிக கப்பட்டிருக்கின்றன. அதன் விளைவாக பொருட்கள் ஏற்றி இறக்கும் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டிருக் கின்றன. பெருந்தொகையில் வேலைவாய்ப்பின்மை ஏற் பட்டிருக்கின்றது. அன்றாடம் கூலிக்கு வேலை செய்பவர் களே இந்தியாவில் பெரும்பான்மை. வேலைகொடுப்பவர் களிடம் கூலி கொடுப்பதற்கு காசில்லை. இவ்வாறு பல்வேறு வகையான பொருளாதார பாதிப்புகளுக்கு இந்திய பொருளாதாரம் உட்பட்டிருப்பதை நாளாந்தம் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மோடி அவர்கள் அறிவித்த நோக்கங்கள் சாதிக்கப்படக் கூடியவை என்பதை நம்புவது சிரமமாக உள்ளது. இதை மோடி அறியாதவர் என்றும் கூற முடியாது. புழக்கத்தில் இருந்த 500 ரூபா மற்றும் 1000 ரூபா தாள்களை செல்லுபடியற்றதாக ஆக்கியதன் மூலம் இந்தியப் பிரத மர் நரேந்திர மோடி வேறு நோக்கங்களையே சாதிக்க முனைகிறார் என்பது தெளிவு.

நரேந்திர மோடியின் அரசியல் லாப உள் நோக்கங்கள் எவ்வாறாக இருப்பினும், இந்த பணமாற்ற நடவடிக்கை யானது முறைப்படுத்தப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட தொழில் அமைப்புகளினது முக்கியத்துவத்தை அதி கரிக்கும். நாட்டின் பொருளாதார செயற்பாடுகளில் கணிச மான அளவு அரசின் கண்காணிப்புக்கள் கொண்டுவரப் படும். அதனால் அரச வரி வருமானத்திலும் கணிசமான முன்னேற்றம் ஏற்பட வாய்ப்புண்டு.

கடந்த இருபது ஆண்டுகளுக்குள் இந்தியாவின் வங்கித் துறையின் வளர்ச்சி மிக அபாரமானதாகும். 1990 ஆண்டு சுமார் 50000 வங்கிக் கிளைகளைக் கொண்ட இந்தியா வில் இப்போது வர்த்தக வங்கிகளின் கிளைகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 2 இலட்சம் உள்ளன. இந்திய நகரங்களின் மூலைமுடுக்குகள் எல்லாம் வங்கிகளின் பணம் வழங்கும் இயந்திரங்கள் (ATM) நிறுவப்பட்டுள்ளன. இந்தியாவில் 18 வயதுக்கு மேற்பட்டோரின் எண்ணிக்கை சுமார் 90 கோடி. இங்கு கிட்டத்தட்ட 45 கோடி மொபைல் தொலைபேசிகள் பாவனையில் உள்ளன. இதில் மூன்றில் ஒரு பகுதி யினரின் கையில் என்றாலும் ஸ்மார்ட் தொலைபேசிகள் இருக்குமா என்பது சந்தேகமே.

இந்திய மத்திய வங்கி இவ்வளவு நாணயத்தாள்களை அச்சிட்டு வங்கிகளுடாக மக்கள் மத்தியில் புழக்கத் திற்கு விடுவதற்கு ஏறத்தாழ 25000 கோடி ரூபாக்களை செலவிட வேண்டும் எனப்படுகிறது. ஒரு நாணயத்தாளை அச்சிடுவதற்கு மட்டும் சராசரியாக 5 ரூபாவை செலவிட வேண்டும். 500 ரூபா மற்றும் 1000 ரூபா நாணயத் தாள்கள் இந்தியாவின் புழக்கத்திலுள்ள மொத்த பணத் தாள்களில சுமார் 85 சதவீத பங்கை வகிக்கின்றன.

சில்லறை வியபாரத்திலுள்ள பெரும் வர்த்தக நிறவனங் கள், பெரும் தொலைத் தொடர்பு வர்த்தக நிறுவனங்கள், வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள், அமைப்புரீதியாக சேவைத் தொழில்களை மேற்கொள்ளும் நிறுவனங்கள் ஆகியவற்றின் ஈடுபாடும் செல்வாக்கும் மோடி அவர்க ளின் இந்த நடவடிக்கையால் இந்திய பொருளாதாரத்தில் பல மடங்கு அதிகரிக்கும். இந்திய பொருளாதார செயற் பாடுகள் அனைத்தையும் மேலும் முனைப்பாக நவ தாராள முதலாளித்தவ கட்டமைப்பில் ஆளப்படுத்து வதையும் விரிவுபடுத்துவதையும் நரேந்திர மோடி சாதிக்க முனைகிறார் என்பதைப் புரிந்து கொள்வதே இங்கு பிரதானம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியலில் வேதனை தருவது என்ன ?

அபிமன்யு பதில்கள்

*சி. சின்னத்துரை* *திருகோணமலை*

**கேள்வி: புலி ஆதரவு அமைப்புகள் எல்ரீரீயின் மரணித்த போராளிகளை நினைவு கூரும் மாவீரர் தினத்தைக் கடந்த நவம்பர் மாதம் லண்டனில் நடாத்தியிருந்தார்களாமே?**

பதில்: 'எந்த அமைப்பு?, எவர்? புலிகளின் மாவீரர் தினத்தை நடாத்துவதற்கு உரிமையுள்ளவர்கள், அருகதையுள்ளவர்கள்' என்று அவர்களுக்கிடையேயான கசப்பான போட்டிகள், விமர்சனங்கள், தத்தம் ஆதரவு ஊடகங்களினூடாக பரஸ்பரம் வசை பாடல்கள், தர்க்கங்கள், தூற்றுதல்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து, இரு தரப்பினரால் லண்டனில் வெவ்வேறு இரண்டு இடங்களில் மாவீரர் தினம் நடாத்தப்பட்டதாக அறிகிறேன். இந்தப் போட்டியின் விளைவாக, பிரான்ஸ் பாரிசிலும் புலி அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனத் தம்மை அடையாளப்படுத்திச் செயற்படும் இரு தரப்பினர்களுக்கிடையே வாள் வெட்டுச் சம்பவம் நடைபெற்று அங்கு இரத்தம் சிந்தப்பட்டது எனவும் கேள்வியுற்றேன்.

ஏன் இந்த நிலைமை என்று பார்ப்போமானால், இறந்தவர்களை மையப்படுத்தி, அவர்களின் பெயரில், திரளாகச் சமூகம் தருவோர்கள் மத்தியில் தொடர்ந்தும் வியாபாரங்கள், பணம் திரட்டல்கள், சமூகப் பிரபல்யங்கள் ஆகியவற்றைப் பெறும் நோக்கங்களின் பின்னணி புரியும்.

எமது விடுதலைக்காக தமது உயிர்களை அர்ப்பணித்தோரை நினைவு கூருவது வேண்டியதுதான். ஆனால், அவர்களின் பெயரால் தமது சுயலாபத்தைப் பெருக்கிக் கொள்ளும் அடாவடித்தனமான முயற்சிகள் கண்டிக்கப்பட வேண்டியவை. அவற்றைச் செய்வோர்கள் உதாசீனப்படுத்தப்பட வேண்டியவர்கள்.

இன்னுமொரு விடயம்: இறந்தவர்களை நினைவு கூருவதாகச் செயற்படும் இவர்கள், அவயவங்களை இழந்தும், சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டும், எதுவித வாழ்வாதாரங்கள் அற்றும் தங்கள் மானத்தையும் கௌரவத்தையும் இழந்தும் -வடக்கிலும், கிழக்கிலும்- இன்னும் உயிருடன் உழன்று கொண்டிருக்கும் முன்னாள் போராளிகளது வாழ்க்கை வளம்பெறுவதன்பால் காட்டும் அக்கறையும், முயற்சிகளும், வெறும் வெற்றுப் பேச்சுக்களுக்கு அப்பால், அதிகமாக ஒன்றும் இல்லை!. இதுதான் இவர்கள்! -இதுதான் அங்கு வாழும் முன்னாள் போராளிகளின் ஆதங்கமுமாகும்!.



*க. ஐங்கரன்* *யாழ்ப்பாணம்*

**கேள்வி: இலங்கை அரசியலில் உங்களுக்கு வேதனை தருவது என்ன?**

பதில்: பல இருக்கின்றன. -ஆனால் முக்கியமானதாக ஒன்றைக் கூறுவதானால்- நாட்டு மக்களின் நலனிலும், வளத்திலும், முன்னேற்றத்திலும் உண்மையான அக்கறை கொண்டவர்களினதும் வேதனையும், வியாகூலமும் என்னவென்றால் -நாடு சுதந்திரம் அடைந்து ஏறத்தாழ 68 ஆண்டுகளாக, எவ்வளவோ அளப்பரிய இன்னல்களுக்கும் அழிவுகளுக்கும் பின்னரும்- தமிழர்களைக் காட்டிச் சிங்களத் தரப்பினர் அரசியல் செய்வதும், சிங்களவர்களைக் காட்டித் தமிழ்த் தரப்பினர் அரசியல் செய்வதுமான வழக்கத்தை மாற்ற முடியவில்லையே என்பதுதான். இது தானே இன்னமும், தொடர்ந்து நடக்கின்றது இப்படி அரசியல் செய்பவர்களின் கைகள் தான் இன்னமும், இன்றும் ஓங்கி இருக்கின்றன. இதுதானே இரு தரப்பினரும் தேர்தல்களில் வெற்றி பெற தங்கள் கைகளில் வைத்திருக்கும் ஒரே ஆயுதமாகப் பிரயோகிக்கப்பட்டு, ஏனையோரின் குரல்கள் மழுங்கடிக்கப்படுகின்றன. இவர்களைத்தானே இரு தரப்பு மக்களும் தேர்தல்களில் வெற்றி பெற வைக்கிறார்கள் இதுதானே பாராளுமன்றத் தேர்தல் முறைமையும் வழமையும் என்றாகி விட்டது. இதை மாற்ற முடியவில்லையே! இந்த வழக்கம் மாறும் வரை இனங்களுக்கிடையே நல்லிணக்கம், புரிந்துணர்வு, நாட்டின் முன்னேற்றம் என்பவை நடைபெறுவதற்கான வாய்ப்புகளே இல்லை.

இன முரண்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுத்தும் முன்வைத்தும் நடைபெறும் இப்படியான பாராளுமன்றத் தேர்தல் வழமைகளினால் நிலைமையை மாற்ற முடியாது என்பதால்தான், ஆயுதப் புரட்சி மூலம் -அந்தப் புரட்சியில் சிங்கள, முஸ்லிம், மலையக மக்கள் மத்தியிலுள்ள முன்னேற்றச் சக்திகளுடன் கைகோர்த்து இந்த இழிநிலைக்கு ஒரு முடிவு கட்டும் நோக்குடன்தான்- அதே சமயத்தில் அரசியல் மாற்றம் மட்டுமல்ல, சமுதாய மாற்றமும் ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கையில்தான், ஆயுதப் புரட்சிக்கு என் போன்றோரால் ஆதரவு அளிக்கப்பட்டது.

ஆனால், அதுவும் தூரதிரஷ்டவசமாக இரு தரப்பிலுமுள்ள பாசிச சக்திகளால் கடத்தப்பட்டு, அவர்களது கைகளையே பலப்படுத்துவதாக முடிந்து விட்டது. இரு தரப்பிலும் சாதாரண அடித்தட்டு மக்களே பாழ்பட்டுச் சபிக்கப்பட்டவர்களாகி விட்டனர். அம்மக்களும் தங்களின் அவல நிலைக்கான உண்மைக் காரணங்கள் விளங்காதவர்களாக மேன்மேலும் பாழ் கடலில் வீழ்கிறார்கள்!

மறுபடியும், தமிழர்களைக் காட்டிச் சிங்களத் தரப்பினர் அரசியல் செய்வதும், சிங்களவர்களைக் காட்டித் தமிழ்த் தரப்பினர் அரசியல் செய்வதுமான புரையோடிப்போன வழக்கமே தொடர்கிறது. -இதுதான் வேதனையையும், வியாகூலத்தையும் தருகிறது.

> அபிமன்யு பதில்கள் கேள்வி பதில் பகுதிக்கு
> உங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி :
>
> அபிமன்யு பதில்கள்
> கண்ணோட்டம்
> இல: 294 A, கண்டி வீதி
> யாழ்ப்பாணம்

*த. இராமச்சந்திரன்* *மட்டக்களப்பு*

**கேள்வி: ரீ.என்.ஏ யின் தலைவர் இரா. சம்பந்தன், 2017 தீபாவளிக்கு முன்னர் "இனப்பிரச்னைக்கான ஒரு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கும்" எனத் தமிழ் மக்கள் நம்புவதாகக் கூறியிருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பதில்: இதே இரா. சம்பந்தன் அவர்கள்தான், "2016ம் ஆண்டு முடிவதற்குள் ஒரு அரசியல் தீர்வை அடைவோம்" என்று தீர்க்கமாக மொழிந்திருந்தார், அவரைத் தமிழ் மக்கள் நம்ப வைத்தார். இப்பொழுதோ, "2017 தீபாவளிக்கு முன்னர் அது கிடைக்கும் எனத் தமிழ் மக்கள் நம்புவதாக" (தானல்ல) கூறுகின்றார். ஒரு காலக்கெடுவைத் தானே கூறித் தமிழர்களை நம்ப வைத்து வாக்குகளைச் சேகரித்தவர், இப்பொழுது தமிழர்கள் ஏதோ தன்னிச்சையாக "2017 தீபாவளிக்கு முன்னர்" என்ற புதிய காலக்கெடுவை வைத்து தமிழர்கள் நம்புவதாக எழுந்தமானமாகக் கூறுகின்றார்! அடுத்த தீபாவளி வந்த பின்னர், "அடுத்த பொங்கலுக்கு" என்று சொன்னாலோ, அல்லது "சிங்கள அரசாங்கம் உங்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டது" என்றோ அல்லது, "எம்மை ஏமாற்றி விட்டது" என்று பிரசங்கித்தோ தேர்தலுக்கான வாக்குகளை அவர் உறுதி செய்ய முற்பட்டாலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை! "அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா" என்ற நகைச்சுவை நடிகர் கவுண்டமணியின் ஒரு திரைப்பட ஜோக்தான் ஞாபகம் வருகிறது. தமிழர் அரசியலில் காலங்காலமாக இப்படியாக வாக்குறுதிகளை அளிப்பதும், நிறைவேற்றாவிட்டால், அதை மறைப்பதும், சாக்குப்போக்குகள் சொல்வதும் வெகு சகஜம், அதுதான் நடைமுறை என்றாகிவிட்டது. தமிழ் வாக்காளர்களில் பெரும்பான்மையோரும் தட்டிக் கேட்காமல், தொடர்ந்தும் அதே பாணியில் வாக்களிப்பதும் வழமையாகி விட்டது!

அரசியல் தீர்வை அடைவோம் என்றவர் எப்படியான அரசியல் தீர்வு? என்பதைக் கூறவில்லை. இப்படியாக உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவதும் புதிதல்ல!

எப்படியெனினும், அனைத்துத் தரப்பு ஒத்தாசையுடன் சகல தரப்பினரது பெரும்பான்மையோரினது அங்கீகாரம் பெற்ற தீர்வு ஒன்று எய்தப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட்டால் அது ஒரு மிகவும் காத்திரமான நிகழ்வு என்று மிகவும் மகிழ்வு கொள்ளலாம்

## தனித்துவம் மிக்க ஊடக ...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

காலஞ்சென்ற தோழர் ஜெயகாந்தன், முன்னாள் சட்ட மேலவை உறுப்பினர் சுப்பு, தோழர் தா. பாண்டியன், துக்ளக் சோ. தனது தனிப்பட்ட அரசியல் கருத்துக்கள் எதுவாக இருப்பினும் பொதுவுடைமை கட்சிக்காரர்கள் நேர்மையானவர்கள் ஊழல் அற்றவர்கள் என்று தனது துக்ளக்கில் பல தடவை பதிவு செய்தவர்.

ஊழல் அதிகார துஸ்பிரயோகங்களை அம்பலப்படுத்துவதில் அவருடைய நாடகங்கள் எழுத்துக்கள் வலிமையான பாத்திரத்தை வகித்தவை. அகில இந்திய அளவில் பிரபலமானவை.

ஜனநாயகத்திற்கு பழுதேற்படும்போது தான் தனிப்பட்ட முறையில் ஆதரித்தவர்கள் எதிர்த்தவர்கள் எவராயினும் தயவு தாட்சணியம் இன்றி கிண்டலும் கேலியுமாக அம்பலப்பதுவதில் விமர்சிப்பதில் சோ முதன்மையானவர். ஏதும் அற்ப சலுகைகளுக்கு அடிபணிபவர் அல்ல. கூழைக் கும்பிடு போடுபவர் அல்ல

ஆட்சி மாற்றங்களில் கூட அவர் பங்களித்திருக்கிறார். ஊடகம் என்பது 4 வது தூண் என்பதை நிருபித்து வந்தவர். ஊடக அறம் தொடர்பாக அவரிடம் இருந்து நம்மவர்கள் கற்பதற்கு பல விடயங்கள் இருக்கின்றன.

அவரது எழுத்து கேள்வி பதில் பகுதி போன்றவை தனித்துவம் வாய்ந்தவை. இலகுவாக யாராலும் இட்டு நிரப்ப முடியாதவை. பேரலையில் அள்ளுப்படுபவர் அல்ல சோ. தனித்துவமானவர்.

**சுகு- ஸ்ரீதரன்**
**தலைவர்.**
**தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி**

## மதுபாவனை அதிகரிப்பு ஏன்?

யாழ் மாவட்டத்தில் கடந்த 10 மாதங்களில் 35 இலட்சத்து 51 ஆயிரத்து 492 லீற்றர் மதுபானம் விற்பனையாகியுள்ளதாக இலங்கை மதுவரித் திணைக்களத்தின் வட மாகாண உதவிப் பொறுப்பதிகாரி நி.சோதிநாதன் தெரிவித்துள்ளார்.

சாராயவகைகள் 15 இலட்சத்து 23 ஆயிரத்து 986 லீட்டர்களும் பியர் வகைகள் 16 இலட்சத்து 76 ஆயிரத்து 117 லீட்டர்களும் ஸ்பிரிட் வகை மதுபானங்கள் மொத்தமாக 3 இலட்சத்து 51 ஆயிரத்து 388 லீட்டர்களும் விற்பனையாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் மாவட்டத்தில் மதுபாவனை 400 வீதம் அதிகரித்திருப்பதாக நிதியமைச்சர் ரவி கருணநாயக்க தெரிவித்துள்ளார்.

| அள/லீட் | சாரயம் | பியர் | ஸ்பிரிட் |
|---|---|---|---|
| சங்கானை | 231798 | 191412 | 3808 |
| சாவகச்சேரி | 239765 | 181296 | 5394 |
| யாழ்ப்பாணம் | 777520 | 818097 | 28604 |
| பருத்தித்துறை | 268225 | 257926 | 4793 |
| மல்லாகம் | 6676 | 227383 | 308787 |

இங்கு மதுபாவனை அதிகரிப்புக்கு தென்னிலங்கையிலிருந்து வருபவர்களே காரணம் என்று கூறப்படுகிறது இதுபற்றி உங்கள் கருத்துக்களை எழுதுங்கள் பிரசுரிக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோழர் கபூர்
பருத்தித்துறை

தமிழ் இனத்தின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலை வேண்டியும்
ஜனநாயக உரிமைகளை மீட்டெடுப்பதற்குமான போராட்டத்தில்

## தம் உயிரை அர்ப்பணித்த, தோழர்கள், ஆதரவாளர்களை

# நினைவு கூருவோம்

போராட்டத்தில் உயிர்நீத்த அனைவரதும் உழைப்புக்களும் தியாகங்களும் வீண்போகாது அவர்கள் விட்டுச் சென்ற பணியை,
நம்பிக்கைகளை முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவோம்



தோழர் ரஞ்சித்
தம்பிலுவில்

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| செல்வம் | ஜபாத் | 1986.12.13 | முருங்கன் |
| | சத்தியம் | 1986.12.13 | அடம்பன் |
| | பல்லவன் | 1986.12.13 | முருங்கன் |
| அன்ரன் | பிரபா | 1985.12. | பரப்பாங்கண்டல் |
| வே. இராசேந்திரம் | பிரபு | 00.12.1989 | கைதடி |
| செ. குணசேகரம் | சந்திரன் | 15.12.1988 | யாழ்ப்பாணம் |
| விமல் | | 00.12.1989 | கைதடி |
| எட்வின் றொனால்ட் | | 28.12.1990 | குருநகர் |
| யோசப் சுரேஸ் | தங்கேஸ் | 28.12.1990 | குருநகர் |
| ப.பாலசுப்ரமணியம் | கபூர் | 14.12.1986 | பருத்தித்துறை |
| மொகமட் சாகிரியா | மொகமட் | 11.12.1989 | வாழைச்சேனை |
| இராசு சிறிதரன் | சுகந்தன் | 11.12.1989 | |
| பசுபதி கனகசுந்தரம் | துரை | 13.12.1986 | தாளையடி |
| நா. செல்வகுமார் | சாள்ஸ் | 08.12.1989 | பண்டத்தரிப்பு |
| ஏணஸ் பாஸ்கரன் | செல்வின் | 03.12.1988 | குருநகர் |
| இ. ரவீந்திரன் | பிரபு | 09.12.1989 | கம்பர்மலை |
| நடராஜா சிவலிங்கம் | ரமேஸ் | 02.12.1989 | கரவெட்டி |
| சீனிவாசம் ரவி | ஞானம் | 03.12.1988 | மயிலங்காடு |
| பசுபதி தங்கராஜா | ரூபன் | 03.12.1988 | புன்னாலைகட்டுவன் |
| கா. கணேசலிங்கம் | அன்ரனி | 03.12.1988 | புன்னாலைகட்டுவன் |
| வை. கெங்கேஸ்வரன் | சிவபாலன் | 29.12.1984 | பலாலி |
| ஆ. கனகலிங்கம் | பபி | 24.12.1988 | கச்சாய் |
| | அருண் | 30.12.1988 | நாவற்குழி |
| | வசந்தன் | 17.12.1989 | ஏழாலை |
| ராமையா ஜோசெப் | கேடி | 17.12.1989 | யாழ்ப்பாணம் |
| செ. புவனேஸ்வரன் | | 24.12.1994 | தையிட்டி |
| கி. சிவகுமார் | காந்தி | 16.12.1988 | மட்டுவில் |
| க. பாலச்சந்திரன் | | 18.12.1989 | தெல்லிப்பளை |
| ப. நமசிவாயம் | | 27.12.1988 | தொண்டமனாறு |
| | செல்றின் | 16.12.1986 | இடைக்காடு |
| இ. புவனேந்திரன் | ஜீவன் | 14.12.1984 | மண்டூர் |
| கே. பாக்கியராஜா | மாதவன் | 16.12.1985 | மல்வத்த |
| எஸ். மணிசேகன் | நிருபன் | 16.12.1985 | காரைதீவு |
| வி. விக்கினேஸ்வரன் | அருண் | 21.12.1985 | காரைதீவு |
| கே. சதாசிவம் | ரஞ்சித் | 16.12.1986 | தம்பிலுவில் |
| கே. கோகுலதாசன் | ரகு | 16.12.1986 | தம்பிலுவில் |
| எஸ். கீர்த்திராஜா | பண்ணை | 16.12.1986 | தம்பிலுவில் |
| எஸ்.சிவசுப்பிரமணியம் | சுதா | 16.12.1986 | தம்பிலுவில் |
| பி. வசந்தராஜா | அன்பு | 16.12.1986 | தம்பிலுவில் |
| கே. கோகுராஜ் | ரகு | 16.12.1986 | தம்பிலுவில் |
| எஸ். தவராஜன் | ஞானம் | 16.12.1986 | தம்பிலுவில் |

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| பி. கோபாலபிள்ளை | கோபால் | 16.12.1986 | களுதாவளை |
| ஞானப்பிரகாசம் | ரஞ்சன் | 16.12.1986 | தம்பிலுவில் |
| | காந்தன் | 13.12.1986 | மட்டக்களப்பு |
| | தருமர் | 25.12.1986 | தாளங்குடா |
| எம். தர்மலிங்கம் | லிங்கம் | 25.12.1986 | தாளங்குடா |
| | குமார் | 25.12.1986 | தாளங்குடா |
| | குணம் | 25.12.1986 | தாளங்குடா |
| எஸ். அருள் | குறூஸ் | 15.12.1986 | வந்தாறுமூலை |
| வி. வித்தியாகரன் | நிமால் | 15.12.1986 | வந்தாறுமூலை |
| சபா ஜவநாயகம் | வினோத் | 16.12.1986 | மொறகொட்டாஞ்சேன |
| | மணி | 16.12.1986 | கிரான் |
| பி.மகேஸ்வரன் | விஜி | 04.12.1986 | மகிலூர் |
| கணபதிப்பிள்ளை | | 16.12.1986 | தம்பிலுவில் |
| எம். சகாதேவன் | விக்கி | 03.12.1987 | வீரமுனை |
| ஐ.குலசிங்கம் | சின்னபாபு | 00.12.1987 | காரைதீவு |
| எஸ்.ஆனந்தம் | விணோத் | 25.12.1987 | ஐயங்கேணி |
| | மகேந்திரன் | 31.12.1987 | அட்டபாலம் |
| | அருள் | 17.12.1987 | மகிளவெட்டுவான் |
| | நாராயன் | 08.12.1988 | மட்டக்களப்பு |
| ஏ. லோரன்ஸ் | தம்பி | 00.12.1989 | மட்டக்களப்பு |
| | சேகர் | 00.12.1989 | கனையங்கேணி |
| கே.புஸ்பாகரன் | புஸ்ப்பன் | 06.12.1989 | மாங்காடு |
| | லக்ஸன் | 26.12.1989 | கல்லடி |
| | மணியம் | 28.12.1989 | பூவரசன்குளம் |
| பாலகிரிஷ்ணன் | தயா | 28.12.1989 | பண்டாரிக்குளம் |
| சிவலிங்கம் | சிவா | 28.12.1989 | மலையகம் |
| | அஜித் | 28.12.1989 | மலையகம் |
| | திட்டிபாலா | 28.12.1989 | மலையகம் |
| | ராஜ்தீப் | 28.12.1989 | மலையகம் |
| | சுதாகர் | 28.12.1989 | மலையகம் |
| | அல்பிரட் | 28.12.1989 | கண்ணாட்டி |
| | வரதன் | 28.12.1989 | பூந்தோட்டம் |
| | பாஸ்ரின் | 28.12.1989 | பூவரசன்குளம் |
| | ஆறுமுகம் | 28.12.1989 | மலையகம் |
| | பத்மன் | 28.12.1989 | மலையகம் |
| சுப்பிரமணியம் | மணியம் | 28.12.1989 | பேயாடிகூளாங்குளம் |
| இராகவன் | ராகவன் | 28.12.1989 | மலையகம் |
| ராஜன் | றேகன் | 28.12.1989 | மூன்றுமுறிப்பு |
| புஸ்பராசா | ராசா | 28.12.1989 | ஓமந்தை |
| | சத்தி | 28.12.1989 | யாழ்ப்பாணம் |
| துரைசிங்கம் | அன்பு | 27.12.1989 | பூவரசன்குளம் |
| | சாந்தா | 27.12.1989 | வுவனியா |



தோழர் ஜபாத்
முருங்கன்



தோழர் பல்லவன்
முருங்கன்



தோழர் பிரபு
வல்வெட்டித்துறை



தோழர் ஞானம்
சுண்ணாகம்



தோழர் சின்னபாபு
காரைதீவு



தோழர் சிவபாலன்
பலாலி

தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் பங்கேற்று டிசம்பர் மாதத்தில் உயிர் நீத்த தோழர்களில், எம்மால் திரட்ட முடிந்த தோழர்களின் பெயர் விபரங்களை மட்டுமே இங்கே பிரசுரித்துள்ளோம். இங்கு நினைவு கூரப்பட்டுள்ள தோழர்களின் விபரங்களை பூரணப்படுத்த பங்களிப்புச் செய்வதுடன் இங்கு பிரசுரிக்கத் தவறிய, தோழர்கள் பற்றிய தகவல்கள் அவர்களது புகைப்படங்கள் என்பவற்றை எமக்குக் கிடைக்கச் செய்யுமாறு அன்பர்கள், நண்பர்கள், குடும்பத்தவர்கள், தோழர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதம் முன் கதவால் நுழைய ஜனநாயகம் பின் கதவால் வெளியேறுகிறது

### அன்பார்ந்த வாசகர்களே.

இலங்கையில் தேசிய இனப் பிரச்சனையைத் தீர்க்கவும், நல்லாட்சியைத் தோற்றுவிக்கவும் என புதிய அரசியல் யாப்புக் குறித்து விவாதிக்கப்படுறது. இவற்றிற்கு மத்தியில் இனவாத சக்திகள் மிகவும் வெளிப்படையாகவே தலையெடுப்பதாக முன்னாள் ஜனாதிபதி உட்பட பலர் தமது அச்சத்தை வெளியிட்டுள்ளனர். பாராளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறை நிலவும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் இதுவே போக்காக உள்ளது. அவ்வாறானால் இத் தோற்றத்திற்கான பிரதான பொதுவான காரணம் என்ன? ஜனநாயகம் தோற்றுவிடுமா? தடுப்பதற்கு வழி என்ன? என்ற கேள்விகள் எழுவது இயல்பானதே.

கடந்த சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக உலக நாடுகள் பலவற்றில் நடைமுறையிலுள்ள திறந்த பொருளாதார செயற்பாடுகள் ஏற்படுத்திய தாக்கங்களின் விளைவே இனவாதத்தின் எழுச்சிக்கும், ஜனநாயகத்தின் வீழ்ச்சிக்கும் காரணம் எனக் கூறப்படுகிறது. திறந்த பொருளாதாரம் தடையற்ற உற்பத்தி பரிமாற்றத்திற்கு வழி வகுத்தது போலவே, தடையற்ற தனிமனித செல்வக் குவிப்பிற்கும், அதன் காரணமாக ஏற்பட்ட மனித அவலங்கள் தடையற்ற மனித இடப்பெயர்வுக்கும் காரணியாக அமைந்தது. திறந்த பொருளாதாரம் தேசிய பொருளாதார வளங்களையும், அதிகாரங்களையும் சிறு குழுவினரின் கைகளில் குவிக்க வாய்ப்பை வழங்கியது.

இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையும், கூடவே அமுலில் இருந்த தாராளவாத பொருளாதார செயற்பாடும் அதிகாரக் குவிப்பினை சிறு குழுவிடம் கொண்டுபோய்ச் சேர்த்தது. அது பொருளாதாரக் கட்டுமானங்களையும், அரசியலையும் கட்டுப்படுத்தவும் அதன் மூலம் வருமானத்தைக் குவிக்கவும் வாய்ப்பளித்தது.

இதன் விளைவாக ஏற்பட்ட மூலதனக் குவிப்பு கூடவே உற்பத்தி வீழ்ச்சியும், வேலையில்லாத் திண்டாட்டமும் கைகோர்த்துச் செல்ல, ஏற்கெனவே கொதிநிலையில் இருந்த தேசிய இனப் பிரச்சனை பயங்கரவாதமாக மாற்றம் பெற அவை ஊழலும், அதிகாரக் குவிப்பையும் அனுபவித்த சக்திகளின் சுயாதீனத்திற்கு சவாலாக அமைய, அதனால் ராணுவத்திற்குத் தீனி போட்டு இருப்பை உறுதிப்படுத்துவது இயல்பாக நடந்தேறியது. இருப்பினும் பாராளுமன்ற ஆட்சிமுறை தேர்தல் என்ற சடங்கை நடத்த நிர்ப்பந்திக்கிறது. பொருளாதார பற்றாக் குறையால் குடும்ப வருமானத்தை இழந்து தவிக்கும் இம் மக்களிடமிருந்து இவ் ஆட்சியாளர்கள் வாக்குகளைப் பெற்று தமது ஊழல் ஆட்சியை நியாயப்படுத்துவதற்கு புதிய எதிரி தேவையாகிறது. இந்த எதிரிகள் வேறுயாருமல்ல. பெரும்பான்மைத் தேசிய வாத சிந்தனைச் சகதிக்குள் வாழும் மக்கள் தமது பொருளாதார பின்னடைவிற்கு தேசிய சிறுபான்மை இனங்கள் கோரும் ஜனநாயக உரிமைகளே காரணமென நம்ப வைக்கப் படுகின்றனர்.

இவர்கள் சுயாதீனமாக செயற்பட்டால் அது தமது நலன்களுக்கு எதிரானதாக மாற்றம் பெறும் என நம்ப வைக்கப்படுகிறார்கள். இதுவே இலங்கையின் பாராளுமன்ற ஜனநாயத்திற்கு நேர்ந்த கதியின் சுருக்கமாகும்.

### வாசகர்களே.

பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதற்குக் காரணமாக அமைந்த நியாயங்களை எனது கடந்த கடிதங்களில் படித்திருப்பீர்கள். தற்போது அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் (Donald Trump) தேர்தல் பிரசாரங்களின் போது அமெரிக்காவிற்குள் முஸ்லீம்கள் வருவதை தடுக்கப்போவதாகவும், மெக்சிகோ நாட்டவர் சட்டவிரோதமாக வருவதைத் தடுக்க சுமார் 1500 மைல் நீளத்திற்கு சுவர் எழுப்பப்போவதாகவும், சிரியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து அமெரிக்காவை நோக்கி வரும் அதிகள் வருகையை தடுக்கப் போவதாகவும், உள்நாட்டில் உற்பத்தியை வளர்க்கும் பொருட்டு வெளிநாட்டில் உள்ள அமெரிக்க நிறுவனங்களை உள் நாட்டிற்கு வரவழைக்கப் போவதாகவும் தெரிவித்தார்.

திறந்த பொருளாதாரம் ஏற்படுத்திய ஏற்றத் தாழ்வுகளும், அதனால் உள் நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதி அற்ற நிலமைகளும், அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் ஈராக், ஆப்கானிஸ்தான், சிரியா, லிபியா போன்ற நாடுகளில் ஏற்படுத்திய போர் நிலமைகளும் அதன் விளைவாக ஏற்பட்டுள்ள அகதிகள் ஐரோப்பிய நகரங்களை நோக்கிய இடப்பெயர்வும் புதிய பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் ஏற்கெனவே காணப்பட்ட பொருளாதாரப் பற்றாக்குறை, வேலையில்லாத் திண்டாட்டம், குடும்ப வருமானங்களில் வீழ்ச்சி, பாடசாலைகளில், வைத்தியசாலைகளில் இடப் பற்றாக்குறை, போக்குவரத்து நெரிசல் என நெருக்கடிகள் அதிகரித்துள்ள நிலையில் வெளிநாடுகளிலிருந்து அகதிகளாக, தஞ்சம் கோருபவர்களாக, குடியேறும் நோக்கங்களுக்காக என தேச எல்லைகளைக் கடந்து ஐரோப்பிய நாடுகளுக்குள் மக்கள் வருகின்றனர். இதன் காரணமாக உள்நாட்டு மக்கள் மத்தியில் எழுந்துள்ள பயம், பீதி, அச்சம் போன்றவற்றைப் பயன்படுத்தி இயக்கங்கள் தோன்றி குடியேறுபவர்கள், அகதிகள் மத்தியிலே மேலும் நெருக்கடிகளை அதிகரித்துள்ளன. இதனால் ஐரோப்பிய அரசியலின் தோற்றம் மாறியுள்ளது. தேர்தல் நெருங்கும் சமயங்களில் தேசியவாதமும் கூடவே உற்சாகம் கொள்கிறது.

தீவிர வலதுசாரி இயக்கங்கள் பலமடைந்து செல்வதற்கு பின்வரும் சில காரணிகள் இயக்கு விசையாக உள்ளன.




- சுவீடன் நாடு மனித அபிவிருத்தியில் உயர்ந்த தரத்தில் உள்ளது. இந்த நாடு 2015ஆம் ஆண்டு 75,000 அகதிகளை ஏற்றுக்கொண்டுள்ளது. இந் நாட்டு மக்கள் அகதிகளை திறந்த மனதோடு உபசரிப்பதில் உச்சமானவர்கள். இந் நாட்டிலுள்ள புதிய நாஸிஸ்ட்டுகளுடன் தொடர்புடைய சுவிடிஷ் ஜனநாயக கட்சியினர் பாராளுமன்ற தேர்தலில் சுமார் 5.7 சதவீதத்தால் தமது வாக்குப் பலத்தை அதிகரித்துள்ளனர். இது நாடு முழு வதிலும் பரந்துள்ள தீவிர வலதுசாரிப் போக்கை உணர்த்தி உள்ளது.

- ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள முதன்மை நாடுகளில் ஒன்றான பிரான்சில் உள்ள தேசிய முன்னணியின் தலைவியான மரைன் லிபென் (Marine Le Pen ) எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறும் வாய்ப்புகள் உள்ளதாக கூறப்படுகிறது. இக்கட்சி 1972 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. பிரான்ஸ் நாட்டின் தேசிய அரசியலில் இதுவரை காத்திரமான பங்கினைச் செலுத்தாத இக்கட்சி தற்போது முன்னிலையில் உள்ளது. இவ் வளர்ச்சி பிரான்ஸ் தேசிய அரசியலின் மாறிவரும் கோர முகத்தை உணர்த்தி நிற்கிறது.

- ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைந்துள்ள வெளிநாட்டவர்களின் திடீர் தொகை அதிகரிப்பு தீவிர வலதுசாரி அரசியலுக்கு பெரிதும் உதவியுள்ளது. இத்தாலி, கிரேக்கம் ஆகிய நாடுகளுக்கு 2015ம் ஆண்டில் மட்டும் சுமார் 5 1/2 லட்சம் மக்கள் சென்றுள்ளனர். இதே காலப் பகுதியில் ஜேர்மனி 15 லட்சம் பேரை அனுமதித்துள்ளது. ஒரு அகதியைக் குடியமர்த்த 14,340 அமெரிக்க டொலர்களை இந்நாடு செலவிடுவதாக கூறுகிறது. அவ்வாறானால் 15 லட்சம் மக்களைக் குடியமர்த்த 21.5 பில்லியன் டொலர்கள் தேவைப்பட்டுள்ளது. உலக அளவிலான பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் இவை பெரும் தொகை என வாதிடப்படுகிறது.

- மிகக் குறுகிய காலப் பகுதியில் பெரும் தொகையாக நுழைந்துள்ள அகதிகளால் அரசியல் லாபம் பெற்று வருவது தீவிர வலதுசாரி அரசியல் சக்திகளே. மக்கள் மத்தியிலே எழுந்துள்ள தமது எதிர்கால வாழ்வு குறித்த அச்சங்கள் அதாவது வேலைவாய்ப்பின்மை, வருமானக் குறைவு, ஓய்வூதியக் குறைப்பு போன்ற அச்சங்களை இச் சக்திகள் பயன்படுத்துகின்றன. இவ் ஆபத்துகளுக்கு முக்கிய காரணம் அகதிகளின் வருகையே என இத் தீவிர வலதுசாரி சக்திகள் நியாயப் படுத்துகின்றன. இதுவே ஐரோப்பா, அமெரிக்கா எங்ஙனும் தற்போது ஒலிக்கிறது.

- அமெரிக்க, ரஷ்ய உறவுகள் மீண்டும் கூர்மை அடையத் தொடங்கியுள்ளது. உக்ரெய்ன் நாட்டின் ஒரு பகுதியான கிரைமியா (Crimea) இனை ரஷ்யா இணைத்ததன் காரணமாக அந் நாட்டிற்கு எதிராக அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் பொருளாதாரத் தடைகளை விதித் துள்ளன. ஐரோப்பிய நாடுகளின் வர்த்தகத்தில் ரஷ்யா வுடனான வர்த்தகம் மூன்றாவது இடத்தை வகிக்கிறது. அமெரிக்க தடைகளை ஐரோப்பிய நாடுகளும் பின்பற்ற வேண்டும் என வற்புறுத்தப்படுவதால் பொருளாதார அடிப்படையில் ஐரோப்பாவே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இத் தடை நீடிக்குமானால் ஐரோப்பா சுமார் 114 பில்லியன் டொலர்கள் வருமானத்தை இழக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

- ரஷ்யா மீதான பொருளாதாரத் தடை என்பது ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள 28 நாடுகளால் அனுசரிக்கப்படுகிறது. இது அங்கத்துவ நாடுகளுக்கு பெரும் பிரச்சனையாக உள்ளது. உதாரணமாக கிரேக்கம், இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகள் தமது விவசாய உற்பத்தியை ரஷ்யாற்கு ஏற்றுமதி செய்கின்றன. தடை காரணமாக விவசாயிகள் வருமானத்தை இழந்துள்ளனர்.

- சிரியா நாட்டில் ஏற்பட்டுள்ள போர் நிலமைகளை முடிவுக்குக் கொண்டு வருவது என்பது ரஷ்யாவைப் பொறுத்த வரையில் சிரிய அதிபர் அசாத் அவர்களை பதவியில் வைத்திருப்பதும், மத்திய கிழக்கில் பலமான நட்பு நாடாக அந் நாட்டை பாதுகாப்பதும் அவசியமானது. ஐரோப்பிய நாடுகள் அசாத் இனை பதவியிலிருந்து அகற்ற முயற்சிக்கின்றன. அவ்வாறானால் அகதிகள் ஐரோப்பாவை நோக்கிச் செல்வது தவிர்க்க முடியாத விளைவாகும். அகதிகள் வெளியேற்றத்தைத் தடுக்க வேண்டுமெனில் சிரியாவில் நிலையான ஆட்சி அவசியம். தற்போதைய சூழலில் அசாத் மூலமே அது சாத்தியமாகும். எனவே ஐரோப்பிய நாடுகள் ரஷ்யா மீதான பொருளாதாரத் தடையை நீக்குவது தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது.

அமெரிக்க புதிய அதிபர், பிரான்ஸ் புதிய குடியரசுக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் போன்றோர் ரஷ்யாவுடன் நெருங்கிய உறவுகளை வளர்க்கவே விரும்புகின்றனர்.

பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற முடிவு செய்தது. இது பிரித்தானிய பழைமைக் கட்சியான கன்சவேட்டிவ் ஆதரவாளர்களுக்கு வாய்ப்பாக அமைந்தது. பிரித்தானிய பாராளுமன்றத்தில் ஒரே ஒரு ஆசனத்தைப் பெற்றுள்ள தீவிர வலதுசாரி சுதந்திரக் கட்சி பிரித்தானிய வெளியேற்றத்தை முழுமையாக ஆதரித்தது. அதனால் இன்று வலதுசாரிப் பெண்மணி திரேசா மே பிரதமராகியுள்ளார். எனவே பிரித்தானியாவிலும் தீவிர வலதுசாரி சக்திகளே பலமடைந்துள்ளனர்.

இதன் காரணமாக ஐரோப்பிய வலதுசாரி சக்திகளுக்கும், தீவிர வலதுசாரி சக்திகளுக்குமிடையே இணக்கம் மிக அதிகமாக தற்போது உள்ளதால் தேசியவாதம் கலந்த வலதுசாரி சிந்தனைகள் ஐரோப்பிய அரசியலில் தற்போது தீவிரமடைந்துள்ளன. இத் தீவிர வலதுசாரிப் போக்கும், அதனைத் தொடர்ந்து காணப்படும் அகதிகள் மீதான தாக்குதல்களும், இதுவரை தம்மை ஜனநாயகத்தின் பாதுகாவலர்களாக பிரகடனப்படுத்திய இந் நாடுகள் எதிர்நோக்கும் இன்றைய சவால்களாகும். வலதுசாரிகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவார்களாயின் உள்நாட்டு நிலமைகள் மிகவும் கொதி நிலைக்குச் செல்லலாம். இதுவே அமெரிக்க புதிய அதிபரின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கப் போகிறது.

இவ்வாறான போக்கு தொடர்ந்து செல்வதற்கு இன்னொரு காரணம் இடதுசாரிகளும் இப் பிரச்சனைகளுக்குத் தக்க தீர்வுகளை முன்வைக்கத் தவறுவதாகும். உள் நாட்டில் வருமானப் பற்றாக்குறை, உற்பத்திக்குறைவு, வேலைவாய்ப்பின்மை போன்றன அதிகரித்த நிலையில் அகதிகளின் வரவும் பிரச்சனைகளை மேலும் உக்கிரப படுத்தியுள்ளது. ஏற்கெனவே திறந்த பொருளாதாரத்தின் தோல்விகளால் நலிந்துள்ள மக்கள் மீது இப் பிரச்சனைகளால் மேலும் அழுத்தங்கள் அதிகரித்து பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையேயான இடைவெளி

( தொடர்ச்சி 9 ம் பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு கூருவோம்

( 7 ம் பக்கத் தொடர்ச்சி )


தோழர் பீற்றர்
திருகோணமலை


தோழர் பிரபா
மன்னார்


தோழர் செல்றின்
இடைக்காடு

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| யோகராஜா | இன்பம் | 27.12.1989 | புளியங்குளம் |
| செல்வநாயகம் | செல்வா | 27.12.1989 | மலையகம் |
| | ஜெயதேவன் | 27.12.1989 | கோவில்குளம் |
| | லிங்கம் | 27.12.1989 | நொச்சிமோட்டை |
| | குமார் | 27.12.1989 | யாழ்ப்பாணம் |
| | சந்திரபாலா | 27.12.1989 | தேக்கம்காடு |
| பாலசுப்பிரமணியம் | அங்கர் | 27.12.1989 | பட்டாணிசோலை |
| ரட்ணவீர | மதன் | 27.12.1989 | சூசபிள்ளையார்குளம் |
| | திலிப் | 27.12.1989 | சூசபிள்ளையார்குளம் |
| | அமுதன் | 27.12.1989 | நைநாமடு |
| | ராஜன் | 27.12.1989 | யாழ்ப்பாணம் |
| | பீற்றர் | 27.12.1989 | மலையகம் |
| மணிவண்ணன் | குர்க்காஸ் | 27.12.1989 | பூவரசன்குளம் |
| கணேஸ் | | 27.12.1989 | பூவரசன்குளம் |
| | சுரேஸ் | 27.12.1989 | பூவரசன்குளம் |
| | சீலன் | 27.12.1989 | பூவரசன்குளம் |
| | யோகன் | 27.12.1989 | பூவரசன்குளம் |
| | ரஞ்ஜன் | 27.12.1989 | பூவரசன்குளம் |
| | ஜோதி | 27.12.1989 | சஸ்திரிகூளாங்குளம் |
| | டேவிட் | 27.12.1989 | சாஸ்திரிகூளாங்குளம் |
| | நரேஷ் | 27.12.1989 | பாவற்குளம் |
| | அஷோக் | 27.12.1989 | சாஸ்திரிகூளாங்குளம் |
| | சின்னவன் | 27.12.1989 | பூந்தோட்டம் |
| தம்பிராசா | பாலா | 27.12.1989 | பூவரசன்குளம் |

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| புஷ்பம் | கேசவன் | 27.12.1989 | பூவரசன்குளம் |
| சந்திரகுமார் | ராஜா | 27.12.1989 | பூவரசன்குளம் |
| ராஜேந்திரன் | கலுமாலி | 27.12.1989 | மலையகம் |
| | கந்தையா | 27.12.1989 | மலையகம் |
| கலைச்செல்வன் | ரமேஷ் | 27.12.1989 | மலையகம் |
| | மகேந்திரன் | 27.12.1989 | கோவில்குளம் |
| | கிட்டு | 27.12.1989 | மலையகம் |
| | ஆசான் | 27.12.1989 | மலையகம் |
| | அன்ரன் | 17.12.1989 | தோணிக்கல் |
| அறிவளகன் | அறிவு | 00.12.1989 | கங்குவெலி |
| கந்தசாமி | விசு | 00.12.1989 | ஈச்சலம்பத்தை |
| குபேரன் | காந்தி | 13.12.1989 | |
| கோபு | சுதா | 13.12.1989 | திருகோணமலை |
| கணேசலிங்கம் | கணேஸ் | 00.12.1989 | பச்சனூர் |

## ஜெயலலிதா என்ற பெண் ஆளுமை ...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

தமிழக ஆணாதிக்க சிந்தனையின் மீதான நிறுத்த முடியாத மீறலாகவே அவர் எழுச்சியுற்றார்.

அவருடைய வர்க்க பின்புலத்திற்கு முரணாக அவர் சமூகத்தின் மிகச் சாமானிய மக்களிடம் ஈடுபாடு கொண்டிருந்தார்.

கோடிக்கணக்கான பெண்கள் தாம் ஆதரவற்றுப் போய் விட்டதாக ஏக்கமுற்றிருக்கிறார்கள். இது வெறும் மாயக் கவர்ச்சி அல்ல. சாதாரண மக்களின் பிரச்சனைகளை, அவர்களின் மொழியை, மனதை அவரளவுக்கு புரிந்து கொண்ட அரசியல்வாதிகள் இன்றைய தமிழகத்தில் அரிதே.

சுதந்திரப் போராட்டக்காரர் தில்லையாடி வள்ளியம்மை, கவி பாரதி, பொதுவுடைமை கட்சிக்காரர்கள், தந்தை பெரியார், ,காமராஜர், அண்ணாத்துரை, எம்.ஜி.ஆர்., ஜீவானந்தம், கலியாணசுந்தரம், ராமமூர்த்த்தி, மா.பொ.சி, ஜெயகாந்தன், ராஜம் கிருஸ்ணன் போன்ற இலக்கிய உலக ஆழுமைகள் எம் மத்தியில் வாழும் கலைஞர் தோழர் நல்லக்கண்ணு தா பாண்டியன் ராமகிருஸ்ணன் ,திருமாவளவன் போன்ற ஆளுமைகள் இன்னும் இங்கு சொல்லப்படாத பலர் தமிழகத்தை அலங்கரித்திருந் தாலும் அகில இந்திய அளவில் இந்திராகாந்தி என்ற ஆழுமை உருவாகி இருந்தாலும் தமிழகம் ஆணாதிக்க நில மானிய சமூக செல்வாக்கினுள்தான் இருந்தது.

அதையெல்லாம் உடைத்துக் கொண்டு தமிழக அர சியலில் இருந்த பொதுவான வன்முறை அராஜகம் பெண்களுக்கெதிரான வன்முறை தூற்றுதல்கள் இழி சொற்கள், பழிச்சொற்கள், நிந்தனைகள் எல்லாவற்றை யும் கடந்து பெரும் ஆழுமையாக எழுச்சி பெற்றவர் ஜெயலலிதா. எம்ஜிஆரின் இறுதி ஊர்வல வண்டியில் அவர் இழிசொற்களால் அவதூறு செய்யப்பட்டு தள்ளி விழுத்தப்பட்டது. தமிழக சட்டசபையில் அவருடைய ஆடையை பிடித்து இழுத்தது உள்ளிட்ட எல்லா அவ மானங்களிலும் இருந்தே ஆணாதிக்க அகங்காரம் திமிர்த் தனச் சூழல் மத்தியிலேயே அவருடைய பல்வேறு முரண் களையும் நடத்தைகளையும் எச்சரிக்கை உணர்வுகளை யும் அவதானிக்க வேண்டும். நேர்த்தியாக எதனையும் அவர் கரடுமுரடான தரையில் மேற் கொள்ள வேண்டி இருந்தது. அவர் மிகவும் புத்திசாதுரியமும் துணிச்சலும் மிக்க தலைவர்.

தமிழகத்தை பொறுத்தவரை பெண்களின் நிலையில் குறிப்பிடத் தகுந்த மறுமலர்ச்சி ஏற்பட்டதெனலாம். இந்தியாவின் புகழ்பெற்ற பொருளியல் அறிஞர் அமர்த் தியாசென் கல்வி, சுகாதாரம், சிறுவர் போசாக்கு பெண் களின நிலைமை, சமூக பாரபட்சங்களை அகற்றுதல் தொடர்பில் தென்னிந்திய மாநிலங்களான கேரளா தமிழகம் மற்றும் இமாச்சால் முன்நிலையில் இருப்ப தையும் இது போன்ற விடயங்களில் தென்னாசிய நாடு கள் என்ற வகையில் வங்கதேசம் இலங்கை என்பன முன்னிலையில் இருப்பதையும் புள்ளிவிபரங்களுடன் ஆதாரபூர்வமாக சுட்டிக்காட்டினார். "ஒரு உறுதியற்ற மகத்துவம்" என்ற நூலில் அவர் இதனை விலாவாரியாக எழுதியுள்ளார். இதில் ஜெயலலிதா அவர்களின் அழுத்த மான பங்களிப்பும் உண்டு.

இந்திய அளவில் சமூக நீதி இட ஒதுக்கீடுகள் நிகழ் தாலும் தமிழகத்தில் அதனை 60 வீதத்துக்மேல் உயர்த்தியவர்.

பெண்களுக்கு உள்ளூராட்சி அமைப்புக்களில் 50 வீதம் என்ற திட்டத்தை கொண்டுவந்தவர். பெண்கள் சுய உதவிக் குழுக்கள், மகளிர் காவல் நிலையங்கள் என்பவற்றுக்கூடாக வீட்டில், சமூகத்தில் பெண்களுக்கு ஒரு கம்பீரத்தை ஏற்படுத்த முயன்றார்.

சமையலறைச் சாதனங்கள், பாடசாலைகள் -கல்லூரி மாணவர்களுக்கான மடிக்கணனிகள், சைக்கிள்கள் கோடிக்கணக்கில்

விலையில்லா அரிசி, அம்மா உணவகம், அம்மா மருந்தகம், அம்மா குடிநீர் என அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் வறியமக்களுக்கு நியாய விலையில் கிடைக்கச் செய்ய முயன்றார்.

அனாதரவான குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான தொட்டில் குழந்தை திட்டம், ஏழைப்பெண்களுக்கான திருமண உதவி

தமிழகத்தின் குடிநீர் மற்றும் விவசாயிகளுக்கு நீர் வள உரிமைகளை வென்றெடுக்க பாதுகாக்க இடையறாது பாடுபட்டவர்.

கோடிக்கணக்கான விழிம்பு நிலை மக்கள் தங்களின் பாதுகாப்பு பலம் என்று அவரை கருதினர்

ஈழத்தமிழர் உரிமைகள் தொடர்பில் அவர் தெளிவான நிலைப்பாட்டை கொண்டிருந்தார். ஜனநாயக உள்ளடக் கம் மனித உரிமைகள் பாதுகாப்பு தொடர்பில் தெளிவும் கரிசனையும் கொண்டிருந்தவர்

ஈழ ஜனநாயவிரோத பாசிச அரசியலை அவர் என்றும் ஆதரித்ததில்லை.

குடும்ப பின்புல ஆன்மீக மரபுகள் மற்றும் திராவிட இயக்க பாரம்பரியங்களின் கலவையாக அவரது செயற் பாடுகள் பிரதானமாக அமைந்தன.

அவர் குடும்ப பின்புல செல்வாக்கில் இருந்து எழுந்தவர் அல்ல. அவருடைய சொந்த ஆழுமை சமூக செயற்பாடு என்பன குறிப்பிடத்தகுந்தளவு அவரது எழுச்சியில் பங்களித்திருக்கின்றன.

அன்னாருக்கு எம் இதய அஞ்சலிகள். தமிழக- இந்திய மக்களின் துயருடன் எம்மையும் இணைத்துக் கொள்கிறோம்.

**சுகு- ஸ்ரீதரன்**
**தலைவர்.**
**தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி**

## இனவாதம் முன் கதவால் நுழைய ...

( 8 ம் பக்கத் தொடர்ச்சி )

அதிகரித்துள்ள நிலையில் காத்திரமான தீர்வை இடது சாரிகளும் முன்வைக்கத் தவறுகிறார்கள்.

**வாசகர்களே.**

இலங்கை தனது வருமானத்திற்கு பலமடங்கு அதிக மாகக் கடன்களைப் பெற்றுள்ளது. இக் கடன்கள் ஊழலாகவும், பாரிய அபிவிருத்தி திட்டங்களிலும் செல விடப்பட்டிருக்கிறது. இத் திட்டங்களால் வருமானத்தைப் பெறுவதற்கு பல காலம் எடுக்கலாம். ஆனால் குறுகிய காலத் தவணையில் அதிக வட்டிக்கு வாங்கிய கடன் களுக்கு வட்டியைச் செலுத்தவேண்டியுள்ளது. எவ்வாறு செலுத்துவது? மொத்த தேசிய உற்பத்தி போதவில்லை.

இதற்கான ஒரே வழி மக்களின் நுகர்ச்சிப் பொருட்களின் மீது வரியைப் போடுவதுதான். இது நியாயமானதா? இலங்கையில் சுமார் 40 ஆண்டுகளாக நிலவி வரும் திறந்த பொருளாதாரம் ஒரு அதிகார குழு ஒன்றினை, பொருளாதார வளங்களைக் கட்டுப்படுத்தும் ஒரு சிறு குழுவை தோற்றுவித்துள்ளது. இவர்கள் தமது அதிகார இருப்பைத் தக்க வைக்க ஜனநாயக யந்திரங்களை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க விரும்புகின்றனர். மக்கள் மீது பொருளாதாரச் சுமைகளை அடுக்கிச் செல்கின்றனர். இதற்கான விலையை சாமான்ய மக் களே செலுத்துகின்றனர். இவ் உண்மைகள் மக்களைச் சென்றடையாத வரை மக்கள் துன்பத்தைச் சுமப்பவர் களாக, வெறும் வாக்கு யந்திரங்களாகத் தொடர்ந்து வாழ்வர். ஐரோப்பாவில் மாற்றங்களை நோக்கி மக்கள் நகர்கின்றனர். மனித சமூகம் தொடர்ந்தும் அடிமை களாக வாழப் போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org